ISSN: 2012 - 6352

# தொண்டன்




40/=

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் –2013

மலர் - 45 இதழ் - 10

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.

## உள்ளே.....




அன்புடன் உங்களோடு .................. 01
வானம்விட்டு மண்ணில் ................. 02
கீழ்த்திசை தோன்றும் .................... 05
நான்கு புதிய குருக்கள் ................. 06
Hello! Happy Christmas ............ 07
ஒளியே நிலையானது .................... 09
எனக்கோர் இதயம் ....................... 10
நமக்குள் மறைந்திருக்கும் ........... 11
மாணவர் பக்கம் ............................ 14
விறகுச் சைக்கிள் ........................... 15
ஒக்ஸ்போர்ட் பல்கலைக்................. 18
கிறிஸ்துவின் பிறப்பு தினம் .......... 19
தமிழில் கிறிஸ்தவ இலக்கிய ....... 20
கிறிஸ்தவர்கள் கொண்டு .............. 23
பற்களைப் பாதுகாக்க .................... 24
என்னிலே பிறந்திடு ........................ 25
சர்வரோக நிவாரணி ....................... 26
நன்மையா...? தீமையா...? ............. 27
புனிதர்களை அறிவோம் ................ 29
விவிலியம் கற்போம் ....................... 31
அறிவை வளர்ப்போம் .................... 32


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 40/=

ஆண்டு சந்தா : 450/=

(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு

திருவருகைக் காலம் மகிழ்ச்சியின் காலம், மனமாற்றத்தின் காலம். இறை இயேசுவின் வருகைக்காக எம்மை ஆயத்தப்படுத்தும் காலமாக இக்காலம் அமைகின்றது. விருந்தினர் எம் இல்லத்திற்கு வருகின்றார் என்றால் அல்லது ஏதாவது வீட்டில் வைபவங்கள் நடைபெற இருந்தால் நம்முடைய வீட்டை அழகுபடுத்தி துப்பரவு செய்து குப்பை கூழங்களை எல்லாம் அகற்றி, வீட்டிற்கு வர்ணம் தீட்டி ஒரு புதுப் பொலிவுடன் எம் இடத்தை நாம் துப்பரவாக வைத்திருப்போம். ஏனென்றால் மற்றவர்கள் நம்மைக் குறை கூறக்கூடாது என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம். இது வரவேற்கத்தக்க ஒன்றுதான். இது வெறும் வெளி அடையாளமே! இன்று நாம் வெறுமனே வெளி அடையாளங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இதற்கு, அண்மையில் எமது நாட்டிலே நடைபெற்ற பொதுநலவாய மாநாடு உதாரணமாகும். இந்த மாநாட்டை நடாத்த எத்தனையோ ஒளிவு மறைவான செயற்பாடுகள், மற்றவர்களுடைய கண் துடைப்பிற்காக அபிவிருத்திகள் என்று நாடகமாடி பொதுநலவாய மகாநாட்டை அரங்கேற்றியது இலங்கை. அப்பாவி மக்களின் உயிர்களைக் காவு கொண்ட இடங்களைப் பார்வையிடச் சென்றவர்களையெல்லாம் பாதிப் பயணத்திலேயே அனுப்பி வைத்தது. உரிமைகள் பாதிக்கப்பட்ட இடங்களையெல்லாம் பார்வையிடச் சென்ற வெளிநாட்டவரகளுக்குப் பச்சைப் புற்கள் நாட்டப்பட்டு அபிவிருத்திச் செய்யப்பட்ட வெறும் காட்சிப் பொருட்களாக அவை காட்டப்பட்டன. நீதி புறக்கணிக்கப்படுகின்றது. அநீதி தலைவிரித்தாடுகின்றது. மனித உரிமைகள் பேணப்படுமா அல்லது இலங்கை அரசு கொடுத்த விருந்திலே மயங்கி, ஏப்பம் விட்டு, பச்சோந்தி தன் உடலமைப்பை மாற்றுவதுபோல், வெளிஉலகு தன் கொள்கைகளை மாற்றுமா....? இதுதான் உரிமையை, உடைமையை, உறவுகளை இழந்த மக்களின் ஏக்கமாக இருக்கின்றது.

இதேபோல்தான் நாமும் இன்று பலவற்றை மூடி மறைக்கின்றோம். நாமும் பலவேளைகளில் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே! எமக்குத் தேவை எதுவென்றால் உள்ளார்ந்த ஆயத்தம்.

திருவருகைக் காலம் வானம் பூமியை முத்தமிடும் காலம்; தந்தையானவர் படைப்பு அனைத்திற்கும் குழந்தையாகும் காலம்; பிளவுகளுக்கு மத்தியில் மகிழ்வையும் சமாதானத்தையும் உருவாக்கும் காலம்; விழிப்பாகச் செயற்பட்டு வாழ்வில் அடுத்தவர்களைத் தேடும் காலம்.

எனவே, ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக எம்மை நாம் தயார்படுத்த வேண்டும். எம் மனம் தூய்மையாக இருக்க வேண்டும். மனம்மாறி, பாவ அறிக்கை செய்து எம்மை நாம் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு உள்ளத்திற்கும் இல்லத்திற்கும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தந்து நிற்கும். பாவக் கறைகள் அகற்றப்பட்ட எம் உள்ளம் பரமனின் ஆலயமாகக் காட்சி தரும். அப்போதுதான் அவரது ஞானம், வல்லமை, நீதி, சமாதானம், மனவுறுதி, ஊக்கம் போன்ற அனைத்து வரங்களையும் பொழிந்து நம்மை வளமுடன் வாழவைப்பார்.

"வாழ்க்கையைத் தொடாத விழாக்களும் வாழ்வை மாற்றாத கொண்டாட்டங்களும் வெறும் சடங்காக மட்டுமே அமையும்"

"விழிப்பாகச் செயல்பட்டு மனமாற்றமடைந்து ஆண்டவரின் வருகைக்காக நம்மை ஆயத்தம் செய்வோம்!

**அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்**

- ஆசிரியர் -

**இறைவார்த்தை**

*"வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்"*

**(யோவான் 1:1)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



மட்டக்களப்பு ஆயரின்

## கிறிஸ்து பிறப்பு விழாச் செய்தி!

# வானம் விட்டு மண்ணில் வந்ததேன்...?

இம் மண்ணில் பலகோடி மக்கள் பிறந்து, வாழ்ந்து, மறைந்து விட்டாலும் ஒரே யொருவரின் பிறப்பை மட்டும் அகில உலகம் பரந்த ரீதியில் கொண்டாடுகின்றது. அவர்தான் இயேசு. இயேசுவின் வாழ்வும் போதனையும், சிந்தனையும் செயல்களும் அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, இன்றும் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

இயேசுவைப்பற்றி நமக்குத் தகவல் தருகின்ற நற்செய்தியாளர்கள் அவரது பிறப்பு இறைத்திட்டப்படி முன்னறிவிக்கப்பட்டு, காலம் நிறைவேறியபோது இடம்பெற்றது என சான்று பகர்கின்றனர். அவர்கள் இயேசுவை இறைவனின் மனித அவதாரமாக, இறைமகனாக, வார்த்தை மனுவுரு எடுத்ததாகக் கண்டு அனுபவித்து வருகின்றனர்.

இவ்விதமாக,

> "அவர் கட்புலனாகாத கடவுளது சாயல்
> படைப்பனைத்திலும் தலைப்பேறு
> அனைத்தும் அவர் வழியாய், அவருக்காகப்
> படைக்கப்பட்டன.
> அனைத்துக்கும் முந்தியவர் அவரே....!
> சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால்
> அமைதியை நிலைநாட்டவும்
> விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை
> அனைத்தையும்
> அவர்வழி தம்மோடு ஒப்புரவாக்கவும்
> கடவுள் திருவுளம் கொண்டார்"
>
> (கொலோ 1:15-20)

யார் அவர்? அவரது பிறப்பின் நோக்கம் என்ன? என்பதை இரத்தினச் சுருக்கமாக பவுலடியார் தருகிறார். விண்ணையும், மண்ணையும் படைத்த அவர், விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம் அமைக்கவும், வாழுமுன் வரலாறு படைத்தவர், வரலாற்றில் நுழைந்து வரலாற்றை மாற்றி அமைத்ததையும் அவரது வாழ்வில் பார்க்கின்றோம்.

வாழ்வுக்கும் சாவுக்குமிடையே, அழிவுக்கும் ஆக்கத்திற்குமிடையே, வீழ்ச்சிக்கும் எழுச்சிக்குமிடையே தவித்துக்கொண்டிருந்த உலகிற்கு விடுதலை அளிக்கும் விடிவெள்ளியாக அவதரித்தார். மனிதனை அழிவிலிருந்து விடுவிக்க வேண்டுமானால், சமுதாயத்திலும், மனித இதயத்திலும் அடிப்படையான, ஆழமான மாற்றங்கள் நிகழவேண்டும் என தீர்மானித்தார். மதிப்பீடுகள், சிந்தனைப் போக்குகள், நிலைப்பாடுகள், வாழ்வு முறைகள் போன்றவற்றில் முழுமையான மாற்றங்கள் நிகழாவிட்டால் உலகை எதிர்நோக்குகின்ற அழிவு தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதனை உணர்ந்தார்.

அவரது பணி முழக்கம் முதல்முறை நாசரேத்து செபக்கூடத்தில் இடம்பெற்றது.

> "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது.
> ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு
> செய்துள்ளார்.
>
> ஏழைகளுக்கு
> நற்செய்தியை
> அறிவிக்க,
>
> சிறைப்பட்டோர்
> விடுதலை
> அடைவர்..."
>
> (லூக் 4:18-19)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உலக மாந்தர் அனைவரும் மீட்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எவரும் அழிந்து போகக்கூடாது என்ற இறை திருவுளத்தை இயேசு அறிந்திருந்தார். எனவேதான் இம்மண்ணகம் வந்து இறைபணியை முழுமையாய்ச் செய்தார். செபத்தில் தனித்திருந்து, விழித்திருந்து இறை விருப்பத்தை அறிந்தார்; அனுப வித்தார்; அறிவித்தார். "காலம் நெருங்கி விட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று அதிகாரத்தோடு பறைசாற்றினார்.

அவரது நற்செய்தி அறிவிப்பு பலரது மனதில் மலராக மலர்ந்தது. சிலரது மனதைச் சுட்டெரித்தது. சிலரது மனதில் முள்ளாகக் குத்தி ஊடுருவியது. ஆனால், நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் மீட்பு என்ற பலன் கிட்டியது. இயேசுவின் கொடிய சிலுவைச் சாவு, மரணத்திற்குப் பின் அவரின் உயிர்ப்பு, அவர் வாக்களித்த துணையாளரான தூயஆவியின் வருகை, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட, பயிற்றப் பட்ட, அனுப்பப்பட்ட ஒரு சமூகத்தின் பிறப்பாக அமைந்தது. அதுவே, திருச்சபையாகும். தூய ஆவியால் நிறைந்த சீடர்கள் உலகெங்கும் நற்செய் தியைப் பறைசாற்றி திருச்சபையை வளர்த்தனர்.

திருச்சபை என்பது ஓர் இயக்கம். வெறும் நிறுவன அமைப்பு அன்று; கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு, தூய ஆவியின் துணையாலும் தூண்டுத லாலும் வழிநடத்தப்படும் மக்கள் இயக்கம்; இயேசு தொடங்கி வைத்த இறையாட்சியின் அடையாளமா கவும் அதைச் செயல்படுத்தும் கருவியாகவும் விளங் கும் இறைமக்கள் இயக்கம்.

இருபது நூற்றாண்டளவாக திருச்சபை இயங்கினாலும் இன்னும் கிறிஸ்துவின் கனவு நனவாகவில்லையே என்ற சிந்தனை எம்மை ஆட்கொள்கிறது. அவ்வாறாயின் அவரது பிறப்பின் நோக்கம் பொய்த்துவிட்டதா என்று எண்ணத் தோன்றுகின்றது. மனிதனைப் புனிதனாக மாற்ற விளைந்த மாபரன், மனிதன் படிப்படியாக மிருகமாகி வருவதைக் கண்டு கண்ணீர் வடிப்பது நிச்சயம். மனிதம் சிதைந்து, மனித நேயம் மழுங்கடிக்கப்பட்டு, மனித உரிமைகள் மீறப்பட்டு, மறுக்கப்பட்டு மனித குலமே அழிவுப் பாதையை நோக்கி நகர்ந்துகொண்டி ருக்கும் நிலையை எப்படி நிறுத்துவது? இறைவன் உயர்ந்த படைப்பாக எனைப் படைத்தார். என்னைப் போல் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன், என் நண்பன் என்ற மனநிலையை உருவாக்கி புதிதாகப் பார்ப்போம்; புதிதாகச் சிந்திப் போம்; புதிதாகச் செயல்படுவோம்.

"கிறிஸ்தவர்கள் தங்கள் வார்த்தைகளை விட வாழ்வால் கிறிஸ்துவைப் பறைசாற்ற வேண்டும்" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். நம் குடும்பங்க ளில், நாம் வாழும் சமுதாயச் சூழல்களில் இருள் விலகிட நற்செய்தியின் ஒளி ஏற்ற முற்படுவோம். நாம் வாழும் சமூகம் என்பது அரசியல், பொருளாதாரம், சமயம், பண்பாடு, கல்வி, கலாசாரம் போன்ற அமைப் புகளால் உருவாக்கப்பட்டது. சமூக உறவுடையவர் களாக நாம் வாழ்கிறோம். நம் வாழ்வின் செயல்பாடு கள் ஒரு சமூகத்திலேயே நிகழ்விக்கப்படுகின்றன.

சமூகத்தில் பிறக்கிற மனிதன் சமூகத்தில் வாழ்ந்து சமூகத்திலேயே மடிகிறான் என்பது பெரிதல்ல. சமூகத்துக்காக வாழ்ந்து சமூகத்திற்காக மடிவது என்பதே மனிதப் பிறப்பின் மாட்சியாகும். சமூகத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த சமூகத்தை ஏற்படுத்துவதே கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும். கிறிஸ்து தொடங்கி வைத்த இறையாட்சி மலர வேண்டும். இறையாட்சி என்பதே நீதியுள்ள சமூகமே! அநீதியற்ற சமூகமே! சமநீதி வேண்டும். சமூக நீதி வேண்டும். சமூகத்தில் நீதி வேண்டும்.

அத்தகைய சமூகத்தை எவ்வாறு படைப் பது? யார் படைப்பது? நீதியின்பால் அக்கறை உள்ள வர்கள், நீதியின்பால் தாகமுள்ளவர்கள், இறைவ னைத் தேடுபவர்கள், இறை சக்தியை நாடுபவர்கள், மனித நேயம் கொண்டவர்கள் ஆகிய அனைவருமே உருவாக்க வேண்டியது சமூக நீதி.

சுயநலம் எங்கு இல்லையோ, மதவெறி எங்கு இல்லையோ, மொழி இன ஆதிக்க உணர்வு எங்கு இல்லையோ, சுரண்டல் எங்கு இல்லையோ அங்கு இறையாட்சி மலரும்.

மனித நேயம் வளர வேண்டும்

மனித மாண்பு உயர வேண்டும்

இயேசுவின் தியாகம் அனைவரையும் மாற்ற வேண்டும்

இயேசுவின் கனவு நனவாக வேண்டும்.

**பேரருள் தந்தை யோசப் பொன்னையா அவர்கள்**

**ஆயர் – மட்டக்களப்பு மறைமாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செய்திகள்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு 20 ஆண்டுகள் பழமையான ரெனோல்ட் காரொன்றை இத்தாலிய மதகுரு ஒருவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். ஏழைகளுக்கான திருச்சபையொன்றை உருவாக்குவதற்கான திருத்தந்தையின் முயற்சிகளால் கவரப்பட்டே இந்தக் காரை அவருக்கு அன்பளிப்பாக வழங்கியதாக அருட்தந்தை ரென்சோ சொக்கா கூறினார். வத்திக்கான் அதிகாரிகள் விலையுயர்ந்த கார்களை பயன்படுத்தக்கூடாது என திருத்தந்தை ஏற்கனவே வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த அலெக்சான்ரோ அக்ரெஸ்தி என்பவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வாழ்வைத் திரைப்படமாக்க ஆயத்தமாகி உள்ளதாக 'வெரைட்டி' என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. 'அல்பெர்தோ கிரானாதோ' என்பவர் திருத்தந்தையாக படத்தில் நடிக்கவுள்ளார். இவர், 'மோட்டார் சைக்கிள் நாட்குறிப்பேடுகள்' என்ற படத்தில் சிறப்பான நடிப்புத்திறனை வெளிப்படுத்தி அதற்குச் சிறந்த விருதினையும் பெற்றவராவார். "தி லேக் ஹவுஸ்" என்ற படத்தின் மூலம் உலக அரங்குகளில் தம் பெயரை அழியாச் சுவடாகப் பதித்துக் கொண்டவர் இப்படத்தின் இயக்குனராவார்.



வத்திக்கானின் புதிய திருப்பீடச் செயலாளராக பேராயர் பியத்ரோ பரோலின் அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் நியமித்துள்ளார். தற்போதைய திருப்பீடச் செயலாளர் தர்சியோ பெர்த்தோனே அவர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 58 வயதாகும் பேராயர் பரோலின் அவர்களை புதிய திருப்பீடச் செயலாளராக நியமித்துள்ளார். வத்திக்கான், மற்றும் தூதரகப் பணிகள் திருப்பீடச் செயலகத்தின் கீழேயே இயங்குகின்றன.

## நினைவஞ்சலி







அன்ரன் யூசை 17.12.1932 - 12.12.2012 | ஜே.ஜே.ரவிந்திரகுமார் 19.03.1966 - 15.02.1988 | மேரி திரேஸ் யூசை 26.05.1936 - 26.12.2004

அன்புக்கும் அரவணைத்துச் செல்லும்
பண்புக்கும் அணிகலனாய் இருந்து
இன்பமாய் எம் வாழ்வு சிறக்க – என்றும்
இருந்தாயே தந்தையே நீயும்

பாசத்தைக் கொட்டி அமுதூட்டி
பரிவுடன் வளர்த்தெம்மை ஆளாக்கி
நேசத்தால் நிறைத்து நல்வழிகாட்டி
நின்றாயே தாயே நீயும் - நாம்



பூரிக்க ஒரு கொள்கை வழியில் நீயும்
புன்னகை மாறா வகையில்
சாவினை ஏற்றாயே சகோதரா - உன்னை
சரித்திரம் மறக்காது: வாழ்வாய்

உங்களை நினைத்து எந்நாளும் நாம்
உளம் நொந்து அழுகின்றோம்
எங்களைப் பிரிந்தாலும் என்றும் நீங்கள்
எம்முடன் வாழ்கின்றீர் நிழலாய்

உங்கள் ஆன்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.
அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

9ம் குறுக்குத் தெரு, இருதயபுரம் மேற்கு
மட்டக்களப்பு
065 2224683, 2225003, 2225406.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கீழ்த்திசையில் தோன்றும் ஒளிச்சுடர்

கீழ்த்திசையில் தோன்றும் ஒளிச்சுடரே - எங்கள்
தேவமைந்தன் பிறந்த சேதி சொல்லு - அவன்
தாள் பணிந்தோம் மங்கைத் தொழுவம் தன்னில் - எமை
பாவங்களில் நின்று மீட்கச் சொல்லு

அன்றந்த ஞானிகளின் வருகை கண்டு
நின்றதே விண்மீனும் குகைகள் கண்டு
சென்றவர் துதித்தனரே பக்தி கொண்டு - மன்னன்
நின்றானே ஏரோது கலங்கி அன்று

மேரியன்னை தந்தை சூசையுடன்
பாரிலே பாலகனாய்ப் பிறந்தவனே
நேரிய விண்ணரசு ஆள வந்த - எங்கள்
நேசனே உன் வருகை ஆனந்தமே

காலத்தை வென்றவனே கண்மணியே
ஞாலத்தின் ஒளிச்சுடரே ஆரிராரோ - திருக்
கோலத்தில் தீவனத்தில் தூங்கும் எங்கள்
இயேசுபாலனே ஆரிராரோ ஆரிராரோ

ஜெ. சீலியன், இருதயபுரம், மட்டக்களப்பு.



அன்னை மரியாவின் திருத்தலங்களுள் ஒன்றான லூர்து நகரில் பேராலயங்களுக்கும் செபிகளுக்கும் குறைவில்லை. பார்க்கின்ற திசையெல்லாம் ஆலயங்கள்தான். ஆயினும் பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் பேராலயமும் உண்டு. இதுவே, புனித பத்தாம் பத்திநாதரின் பேராலயமாகும்.

இது கட்டிடக் கலையின் முன்னேற்றத் துக்கு எடுத்துக்காட்டு! பூமிக்கடியில் சுரங்கக் கோயிலாக இது கட்டப்பட்டுள்ளது. நடுவில் யாதொரு தூணுமின்றி அனைவரும் பீடத்தை நன்கு பார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்ட அற்புதமான ஆலயம். இதைத் திருநிலைப்படுத்தச் சென்ற திருத்தந்தை 23ம் அருளப்பர் கோவிலுக்குள் காரில் சென்றுதான் இதனை மந்திரித்தாராம். இதில் சுமார் இருபதாயிரம் பேர் இறை வழிபாட்டில் பங்கெடுக்க முடியும். எனினும் இவ்வளவு பிரமாண்டமான ஆலயம் பூமிக்கடியில் இருப்பதை அவ்வளவு எளிதில் அறிந்துகொள்ள முடியாது. கூர்ந்து நோக்கினால் மட்டுமே புலனாகும்.

## பூமிக்கடியில் பேராலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு மறைமாவட்டத்துக்கு
# நான்கு புதிய குருக்கள்

மட்டக்களப்பு தனி மறைமாவட்டமாக உருவானபின் முதன்முதலாக நான்கு திருத்தொண்டர்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுகின்றனர். மட்டக்களப்பு மறைமாவட்ட வரலாற்றில் இது முக்கியமான வரலாற்றுப் பதிவாக அமையும்.

இம்மாதம் (டிசம்பர்) 14ம் நாள் சனிக்கிழமை மட்.புளியந்தீவு புனித மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படும் சடங்குகள் நடைபெறவுள்ளன.



பெரிய கல்லாறு
புனித அருளானந்தர் ஆலயப் பங்கைச் சேர்ந்த
**தம்பியப்பா பத்திநாதன்**
**பத்திநாதன் சரோஜா** தம்பதியரின் மகனான
**பத்திநாதன் சுகந்தன்**



வீச்சுக் கல்முனை
புனித அன்னாள் ஆலயப் பங்கைச் சேர்ந்த
**இராஜசிங்கம் – வசந்தகுமாரி**
தம்பதியரின் மகனான
**R. பயஸ் பிரசன்னா**



அக்கறைப்பற்று
புனித நல் ஆரோக்கிய அன்னை ஆலயப் பங்கைச் சேர்ந்த
**கான்சிலி ஹென்றிக்**
**புளோரன்சியா ஹென்றிக்**
தம்பதியரின் மகனான
**மெருஷன் ஹென்றிக்**




பனிச்சையடி – திராய்மடு
அனைத்து நாடுகளின் அன்னை ஆலயப் பங்கைச் சேர்ந்த
**கொட்பிரி ஜோண்சன்**
**மாக்கிறட் மாஜரின் ஜோண்சன்**
தம்பதியரின் மகனான
**நோட்டன் ஜோன்சன்**

ஆகியோரே இவ்வாறு புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். மறைமாவட்டப் பணித்தளத்தில் புதிய நினைவுகளோடும், கனவுகளோடும் கால்பதிக்கும் இளைய குருக்களை நெஞ்சார வாழ்த்துவோம்! அவர்கள் தம் பணிகள் சிறக்க இறைஆசீர் வேண்டுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






நத்தார் தினம் என்றதும் மேலுள்ளவாறுதான் வாழ்த்துகள் பரிமாறப்படுகின்றன.

"மகள் சித்தப்பா வீட்டுக்கு விஷ் (Wish) பண்ணிட்டீங்களா...? அங்கால மலர் அன்ரிர வீட்டுக்கு, விமலா ரீச்சர்ர வீட்டுக்கு மறந்திடாம விஷ் பண்ணி விடுங்க. நானும் பிஸியா இருக்கிறேன். பிறகு நீங்களும் பிஸியில மறந்திற்றீங்க எண்டாப் போச்சு".

இப்படித்தான் உறவுகள் உரசிப்பார்க்கப்படுகின்றன; நண்பர்களின் நட்புகள் தட்டிப்பார்க்கப்படுகின்றன. இன்றும் இலக்கங்கள் தெரிந்த ஆனால் அறியப்படாத முகங்களுக்கும் வாழ்த்துகள் சொல்லப்படுகின்றன.

இதைவிட, தொலைக்காட்சி அலைவரிசைகள் வாழ்த்துகள் பரிமாறுபவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கின்றன. இவையெல்லாம் "ஹலோ!", "ஹாய்!" என்று கூறிவிட்டுச் செல்வது போன்ற வெறும் வாய்ச்சொல் வாழ்த்துகள்தான். தொலைவில் உள்ள உறவுகள், நண்பர்களுக்கு அனுப்பி வைத்த நத்தார் வாழ்த்து அட்டைகள் கூட வழக்கற்றுப் போய்விட்டன.

அடுத்த வீட்டுத் தாத்தாவுக்குக் கூட, "ஹலோ தாத்தா! ஹப்பி கிறிஸ்மஸ்".

இவ்வாறெல்லாம் நாங்கள் போய்க்கொண்டிருக்கும் பாதை, அதன் அர்த்தம் என்ன வென்றே புரியவில்லை. இவைதான் உறவுகள் என்று போலிச் சிந்தனைகள் நம்மை மூடிக்கொண்டுள்ளன.

கிறிஸ்மஸ் என்பது என்ன...? இறைவன் மனிதன்மேல் கொண்ட பிரியத்தினால், தாயின் வயிற்றில் கருவாகி, குழந்தையாக இப்பூவுலகில் பிறந்தநாள் என்பதுதான் கிறிஸ்மஸ். இறைவன் மனிதனோடு கொண்ட ஆழமான உறவின் வெளிப்பாடுதான், இறைவன் எடுத்த மனித அவதாரம். பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் மனிதனாகவே வாழ்ந்தார்.

கடவுள் மனித மீட்புக்காக இறைவாக்கினர் ஒருவரை அல்லது ஒரு வானதூதர் மூலமாக மனித மீட்பைத் தந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




முடியுமல்லவா....? ஏன் இறைவனே மனித அவதாரம் எடுக்க வேண்டும்...? அதுதான் தந்தைக்கும் பிள்ளைக்குமான பாசம். அப்பாவுக்கும் மகனுக்குமான இரத்த உறவு. மனிதனைப் படைத்தவனுக்குத்தான் தெரியும் மனிதனின் அருமை. எனவேதான் கடவுளே மனிதனாக வந்து மீட்புக் கொடுத்தார். பாவத்தினால் தனக்கும் மனிதனுக்கும் விடுபட்ட உறவைப் புதுப்பித்தார்.

இத்தகைய ஆழமான, புனிதமான உறவு கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் உண்டு. இறைவனோடு நமக்குள்ள உறவை நம் சகோதரருள்தானே நாம் காணவேண்டும். இந்தக் கிறிஸ்மஸ் உறவின் அடையாளமல்லவா....? சகோதரர்கள், உறவுகள் எவ்வளவுக்கு அர்த்தமுள்ளவை என்பதை இந்த நத்தார் காலத்திலாவது எண்ணிப் பார்ப்போம்!

உறவின் அர்த்தம், "தன்னலமற்ற, தியாக அன்புதான் உறவு". வெறும் வாய்ப் பேச்சுகளினால் மட்டுமல்ல சுக, துக்கங்களில் பங்கெடுக்கும் செயற்பாடுகள் உறவின் அடையாளங்களாக அமையும்.

தற்கால உறவுகள், கைபேசிகள் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளன. கைப்பேசி தருவது உறவுகள் அல்ல - தொடர்புகள். தொடர்புகள் அதிகரித்ததால் நேரமும், பணமும் களவாடப் படுகின்றன. இவற்றைப்பற்றிச் சிந்திப்பதில்லை, அல்ல சிந்திக்க நேரமேயில்லை. நமது உறவுக்கார நோயாளியைக் கூட கைப்பேசியில் நலம் விசாரிக்கும் அளவில்தான் உறவுகள் உள்ளன.

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நமக்கு உணர்த்தும் உண்மை மானிடராகிய நமக்காகவும், நம் மீட்புக்காகவும் கடவுள் வானகமிருந்து வையகம் வந்தார். "வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார்" (யோவா 1:14). கடவுள் நம் பாவங்களுக்காகத் தம் மகனை சிலுவையில் பலியாக்கியதன் மூலம் தியாக அன்பையும் நம்மோடு உள்ள உறவையும் அடையாளப்படுத்தினார்.

கடவுள் நம்மீது கொண்ட உறவை விளங்கிக்கொண்டால், நாம் பிறர்மீது கொள்ளும் உறவும் உண்மையானதாக இருக்க வேண்டும். உறவுகள் வர்த்தக நோக்கத்திலல்லாது, சுக துக்கங்களைப் பகிர்ந்துகொள்ளும் தூய்மையான உறவே வேண்டும். கைபேசிகள் ஊடாக ஏற்படுவது உறவுகள் அல்ல, உபத்திரவங்கள். கைபேசி தேவையற்றதொன்றில்லை. அதன் பாவனை, தகவல்கள் கொடுக்கவும் - பெறவுமே. உறவுகள் சந்திப்பதால் - பரிமாறப்படுவதால் - கலந்து கொள்வதால் மட்டுமே உண்மையாய் இருக்க முடியும்.

கிறிஸ்மஸ் தரும் இறைவனின் புனித உறவை நம் சகோதரர்களோடு பகிர்ந்துகொள்வோம். பணத்தின் மூலம் உறவை வளர்க்க நினைக்காது பாசத்தின் மூலம் அதனை உறுதிப் படுத்துவோம்.

- எல். அலெக்சாண்டர் -

## செய்தி

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைக்கான பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபை சார்பாகப் பேசவல்ல கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திருத்தந்தை இவ்வருட இறுதியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அவர் இலங்கைக்கு இவ்வருடம் பயணம் செய்யமாட்டாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அடுத்த வருடம் அல்லது 2015ம் ஆண்டின் நடுப்பகுதியில் அவர் இலங்கைக்குப் பயணம் செய்யும் வாய்ப்பு இருப்பதாகவும் கொழும்பு கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# ஒளியே நிலையானது







கடவுள் ஒளியானவர் என்று வேதநூல் கூறுகிறது. 'ஒளியாம் இறையே வாராய்' என்று ஆலயங்களில் குரலெழுப்பிப் பாடுகின்றோம்.

"நானே உலகின் ஒளி" என்றார் கிறிஸ்து. "அருட்பெரும் ஜோதி" என்றும் "சோதிவானவன்" என்றும் இறைவனை ஒளி வடிவில் வணங்கி, அந்த ஒளியோடு இரண்டறக் கலந்தவர் வள்ளலார் என்று சொல்லப்படும் இராமலிங்க அடிகள்.

நமக்குள்ளும் அவ்வொளி உண்டு. மூலாதாரத்தில் உறங்கிக் கிடக்கும் அவ்வொளியை மேலெழுப்பி "ஆக்ஞா" சக்கரத்தில் நிறுத்தும் வித்தையினை யோக தியான நூல்கள் எடுத்துரைக்கும்.

"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" என்பர் ஞானியர்.

கடவுள் தொடக்கமும் முடிவும் அற்றவர், என்றும் நிலையானவர் எனின், ஒளியும் நிலையானது அல்லவா...? இதனை அறிவியல் ரீதியாக நிரூபித்தவர் அறிவியல் மேதை ஐன்ஸ்டின். அவர் கண்டுபிடித்த 'சார்பியல் கோட்பாடு' எனும் தத்துவம் அதனைச் சார்ந்தது.

எடை, வடிவம், நேரம் உட்பட எதுவுமே நிலையானது இல்லை. இந்தப் பிரபஞ்சத்தில் மாறாத, நிலையான ஒரே ஒரு விடயம் உண்டு என்றால் அது ஒளி மட்டுமே என்றார் ஐன்ஸ்டின்.

அவர் சொன்னது சரியே என்று பரிசோதனைகள் நிரூபிக்க, உலகின் முதல்தர பிரபல மனிதரானார் அவர்.

உங்களுக்குத் தெரியுமா...? 'சார்பியல் கோட்பாடு' என்ற தத்துவத்தை ஐன்ஸ்டின் கண்டுபிடித்தபோது, அவருக்கு வயது 26. சார்பியல் கோட்பாட்டின் சூத்திரமான $E = MC^2$ என்பது விஞ்ஞானிகளுக்கு ஒரு புனிதச் சின்னம்.

கிறிஸ்துவின் பிறப்பை ஒளி விழாவாகக் கொண்டாடி மகிழும் காலம் இது. பிரபஞ்சம் எங்கும் நிறைந்த ஒளி, இயேசு என்னும் ஒளியாக வந்தது. சுயநலன் என்னும் இருளகற்றி நாம் ஒளி பெற நம்மோடு வாழ்ந்து நமக்குள் நிறைந்தது. ஒளிவிழாக் காலத்தில் இன்னும் நீங்கள் சிந்திக்கலாம்.



- மலர்வேந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



ஒளியூட்டும் விளக்குகளும் மின்னும்
ஒப்பாரக் காட்சிகளும் இன்னும்
களியாட்டம் கைகுலுக்கல் கலகலக்கும் சிறப்பொகை
கந்தைத்துணி பாலகனோ மௌனம்

- லெனு.

தொழும்(புப்)பா – 121

# எனக்கோர் இதயம் வேண்டும்....!

மெல். நிர்சன் (செல்வதுரை)



இருள்படிந்த என் இதயவானில் – புத்தம்
புதியதோர் உதயம் காண
பழையவை மறந்தே நானும் – நித்தம்
புதியவை எண்ணி வாழ
எனக்கோர் இதயம் வேண்டும்!

தனிமையின் கொடுமை நீங்கி – நல்ல
துணையுடன் மகிழ்ந்து வாழ
இளமையின் இனிமை தாங்கி – வல்ல
சிறப்புடன் சிரித்து வாழ
எனக்கோர் இதயம் வேண்டும்!

வானுக்கு ஞாயிறு உண்டு – இருளும்
வானுக்குத் திங்கள் உண்டு
என்னிதய வானம் மட்டும் – நாளும்
தனிமையில் துவள்தல் நீங்க
எனக்கோர் இதயம் வேண்டும்!

தாயின் மொழிகள் கேட்கவும் – நான்
தங்கையின் பாசம் காணவும்
காதலி கனிமொழி கேட்கவும் – என்
கவிதை உள்ளம் மகிழவும்
எனக்கோர் இதயம் வேண்டும்!

எடுக்கவும் கொடுக்கவும் வேண்டும் – என்
வாழ்வுக்குப் பொருளும் வேண்டும்
தனிமைக்கு முடிவும் வேண்டும் – நான்
படர்ந்திடக் கொழுகொம்பாக
எனக்கோர் இதயம் வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெய்வீகத்தைப் பற்றி பல ஞானிகளும் சித்தர்களும் கூறிச் சென்றுள்ளார்கள். தற்காலத்தில் ஞானம் கைவரப் பெற்ற சித்தர்கள் படைப்புகளின் தலைவனோடு சகல படைப்புகளும் இறைதன்மை உடையன எனக் கூறினர்.

"எங்கெங்கு காணினும் சக்தியடா,
ஏழு கடலும் அவள் வண்ணமடா"

இது பாரதி.

சித்தம் என்பது சித் என்ற அடியாகப் பிறந்தது. சித் என்றால் அறிவு, ஞானம்.

**சத் சித் ஆனந்தம்** என்பது சமஸ்கிருத மொழியில் இறைவனுக்குக் கொடுக்கப்படுகின்ற பெயராகும்.

- சத் என்பது சத்தியம்
சத்தியம் என்பது உண்மை

- சித் என்பது அறிவு ஞானம்
அதிலிருந்து சித்தம் என்பதைப் பெறுகிறோம்
இறைவனின் சித்தம் என்கிறோம்.

- ஆனந்தம் என்பது இறைவன்.
இறைவனே பேரானந்தம்.

இக்கருத்தை ஒட்டியதே கிறிஸ்தவ வேத உச்சாரணம்.

**பிதா சுதன் தூயஆவி**

- பிதா என்பவர் சத்தியம்
"இருக்கிறவர் நாமே", என்றார் இறைவன்
(விவிலிய ஆகமம்)

- சுதன் என்பவர் ஆனந்தம்
(அச்சுதன் = அர்ச்சிக்கப்பட்ட = சுதன், அர்ச்சுதன் மேலும் அர்ச்சியசிஷ்ட ஆனந்தமான என்ற கருத்தைத் தரும்)

- தூய ஆவி என்பவர்
- ஞானம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இறைவனை அடைந்து கொள்ள தூய ஆவியின் வழிகாட்டல் தேவை.

இயேசு - இரட்சகர். இயேசு தம் வார்த்தைகளை நம்பியவருக்குக் கொண்டு வந்த செய்தி கடவுள் ஒருவர், நாம் அவரின் பிள்ளைகள், தெய்வீகம் எல்லோரிடமும் உறைந்து வாழ்கின்றது என்பதாகும். மனிதன் ஒவ்வொருவரும் இந்தத் தெய்வீகத் தன்மையை உணர வேண்டும். எப்படி உணர்வது? இயேசு அடிக்கடி கூறும் பரலோக இராச்சியம் தத்தம் இதயத்திலே இருக்கின்றது என்பதை,

"அன்பு எனது உருவம்,
உண்மை எனது மூச்சு,
நித்திய மகிழ்ச்சியே எனது உணவு"

பரந்த வானவெளியை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அதன் குணாதிசயத்தில் ஒன்று, அதன் சத்தம் அல்லது வார்த்தை. "வார்த்தை மனுவுரு ஆனார்" என்று கூறுகின்றது பரிசுத்த யோவான் எழுதிய வேதாகமம்.

ஓம் என்ற ரீங்கார மந்திரத்தை இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்கள் பயன்படுத்துகின்றனர். இதன் விரிவு அ, உ, ம் முதல் இடை கடை எனப் பொருள் பட்டு முதலில் இருந்தவன் இறைவனே, இடையில் இருப்பவனும் அவனே! இறுதியில் இருப்பவனும் அவனே! இறைவனே! எனப் பொருள்படும். இறைவனுக்கு இன்னுமோர் பெயர் **அன்பு.** அதற்கு மற்றையச் சொல் சிவம். "ஓம் நமோ சிவாய" எனப் பொருள் பிரித்து இறைவனிலே இன்பம் காண: இருப்பவனும் அவனே என்றனர்.



திருவிவிலியம் இவ்வாறு கூறுகின்றது. இறைவனின் "உண்டாகுக" என்ற வார்த்தையால் அண்ட சராசரம் படிப்படியாக உருவாகியது. நாம் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பெயரைக் கொடுக்கின்றோம். அதற்கு வார்த்தை என்கிறோம். மனிதன் என்ற வார்த்தை உன்னையும் என்னையும் குறிக்கின்றது. மரம் என்ற வார்த்தை முன்னால் நிற்கும் மரத்தைக் குறிக்கின்றது. கடவுள் என்ற வார்த்தை கடவுள் இருக்கிறார் என்பதைக் குறிக்கின்றது. கடவுள் இல்லாது விடில் இந்தச் சர்வ உலகமும் இல்லை. கடவுளின் சித்தம் இல்லாதுவிடின் இந்த உலகமே இல்லை. கடவுள் சித்தம் அன்பு, ஞானம் அது சக்தி. அதுவே இன்பம்.

மூவொரு கடவுள் ஒவ்வொருவரிலும் அடையாளமாக இருக்கின்றார். உன்னிலேயும் அந்தத் திருத்துவம் இருக்கின்றது. அதை தெய்வீக அம்சங்களின் அடையாளமாகக் காணும் போது, அது உன்னில் மறைந்திருக்கும் தெய்வீகம்.

மனித உடலில் உள்ளடக்கப்பட்ட மூன்று முக்கிய அம்சங்கள் இதயம், மனம், பேச்சு இவையே. தெய்வீக அடையாளம் இதயம் கடவுள் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. இதுவே ஆத்மா. இந்த மனம் என்னும் ஆத்மா ஞானத்தின் ஆத்மா. இது தெய்வீகத்தையும் அன்பின் தத்துவத்தையும் உணர்த்துகின்றது.

கடவுள் கட்டுகளுக்கு அப்பாற்பட்டவர்; அவரின் அன்பிற்கும் அளவில்லை.

"அன்பிற்கும் உண்டோ
அடைக்கும் தாழ்"

ஆத்மா என்னும் இதயத்தில் இருந்தே மனம் வெளிப்படுகின்றது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அண்ட சராசரத்தில் எல்லாவற்றையும் அடையாளம் இட்டுக் காட்டுகின்றது. அது கடவுளின் அகம் ஆகும். நான் என்பது தெய்வீகமாகக் கருதினால் உன்னுடைய எண்ணமும், செயல்களும் வழிதவறிப் போகாது. நான் என்பது ஆணவமாகக் கொண்டால் சுய அழிவுதானே வருகிறது. இந்த மனம் தூய்மை அடைகின்றது. தெய்வீகம் உடனடியாக அனுபவிக்கப்படுகின்றது. இயேசு மலைப்பிரசங்கத்தில் கூறினார். தூய மனம் உடையோர் பாக்கியவான். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்". தெய்வீகம் வேறுபட்டதல்ல. நீயே அது. இந்தத் தெளிவு உன்னில் வளர வேண்டும்.

தேவ அன்பு, தேவ சிநேகம், பாவத்திற்குப் பயம், பச்சாதாபம் அல்லது ஒப்புரவு, சமூக ஒழுக்கவியல் கடைப்பிடிப்பு ஆகிய மூன்று தத்துவம் தெய்வீகத் திருத்துவம் போன்றது. தூய்மை, தூய்மையான வார்த்தை அது தூய செயலுக்கு வழி வகுக்கும்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று"

என்கிறது வள்ளுவம். கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்பதைக் கண்டு பிடிப்பின் எந்தப் பெருமுயற்சியும் இல்லாது எல்லாம் கைகூடும்.

திருவிவிலியம் கூறுகின்றது, கடவுள் நம்மைத் தேடுகிறார். இதில் நம் சிந்தனையைச் செலுத்துவோம். கடவுள் எல்லாக் காலத்திலும் எங்கும் இருக்கிறார். கடவுளை தேடுபவரைக் கடவுள் காணவேண்டும். கடவுள் எங்கே தேடுகின்றார், எதிலே எவரைத் தேடுகின்றார். உண்மைத்தனம், சுய நலம் இல்லாத தன்மை, ஒரே நிலை, பக்திமான் ஆகிய குணாதிசயம் நிரம்பியவர்களைத் தேடுகின்றார்.

> **"பரந்த வானவெளியை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அதன் குணாதிசயத்தில் ஒன்று. அதன் சத்தம் அல்லது வார்த்தை. "வார்த்தை மனுவுரு ஆனார்" என்று கூறுகின்றது பரிசுத்த யோவான் எழுதிய வேதாகமம்."**

ஓர் ஊக்கம் உள்ள பக்திமான் அல்லது தீவிர பக்திமான், தாம் இறைவனோடு ஒன்றிணையும் அனுபவ மகிழ்ச்சியைப் பெறுகின்றார். சீனி இனிப்பானது, ஆனால் மலேரியா காய்ச்சல் உள்ளவனுக்கு அது கசப்பாக இருக்கும். இந்தச் சுவை அவனது நாக்கிலே தவிர சீனியில் இல்லை. இந்த வேறுபாடு உலக ஆசைகளில் மூழ்கி இருப்பவனுக்குத் தெய்வீக இனிமை தெரிவதில்லை, அதை அனுபவிக்க முடிவதில்லை.

பக்திமான் ஒருவன் ஓலமிடுகின்றான். "கடவுளே! நீ என்னை மறந்துவிட்டாயா....?" இது சாத்தியம் இல்லை. அவன், தான் கடவுளின் பிள்ளை என்பதையும் அவர் நல்ல வழிகாட்டி என்பதையும் மறந்து விடுகின்றான்.

இன்றைய மனிதன் கடவுளைத் தேடுகின்றான், கடவுளின் இயல்பைத் தேடுகின்றான். ஆனால், தான் முழுமை என்பதையும் கடவுளைத் தேடி உலகில் அலைந்து திரிவது வீண் என்பதையும் மறந்து விடுகிறான். கடவுள் நம் உள்ளத்திலேயே இருக்கின்றார். வேறு எங்கு நாம் போய்த் தேடுவது....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







ஜேர்மன் லூத்தரன் சபையே இந்தியாவுக்கு முதன் முதலில் வந்த புரட்டஸ்தாந்து சீர்திருத்த சபையாகும். இவர்கள் 1706ல் டென்மார்க் அரசனின் பாதுகாப்புடன் திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள றங்கேபார் எனும் இடத்திற்கு வந்தனர். 1795ல் பிரித்தானியர் கேரளா மலபாரைக் கைப்பற்றினர். 1806ல் பிரித்தானிய ஆளுநர், குனோடியஸ் புக்கானன் எனும் அங்கிலிக்கன் குருவை புனித தோமையாரின் ஆலயம் பற்றி ஆராய்ச்சி செய்ய அனுப்பினார்கள். இதனைத் தொடர்ந்து 18ம், 19ம் நூற்றாண்டில் ஏனைய பல சபைகள் தென் இந்தியாவினுள் நுழையலாயின.



**லூத்தரன் சபை I :**

16ம் நூற்றாண்டிலே அகுஸ்தினார் சபைக் குருவான மாட்டீன் லூதர் திருச்சபையின் கொள்கைகளையும், வாழ்வையும் சீர்திருத்தப் போவதாகக் கூறி கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றார். இவரால் ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்ட சபையே "லூத்தரன் சபையாகும்". இச்சபையானது விரைவாக டென்மார்க்கிலும், சுவீடனிலும் பரவி இன்று பல சிறிய சிறிய சபைகளாய்ப் பிரிந்துள்ளது. இந்தியாவிற்குள் நுழைந்த முதல் புரட்டஸ்தாந்து மதம் லூத்தரன் சபையாகும். இச்சபையானது பார்த்தலோமியோ சீகன்பாகு என்பவரால் தரங்கம்பாடி எனும் இடத்தில் 1706ல் ஆரம்பிக்கப்பட்டது. சீகன்பாகு தமிழை நன்கு கற்று 1711ல் புதிய ஏற்பாட்டினை தமிழில் மொழிபெயர்த்தார். மணஆரண் என்பவரே 1730ல் லூத்தரன் சபையிலே முதல் துறவியாகி இதன் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவராவார். இன்று இந்தியாவிலே 5 மில்லியனுக்கு மேற்பட்ட லூத்தரன் சபைகள் காணப்படுகின்றன. ஆனால், இவைகள் பல வகைகளில் பிளவுண்டு லூத்தரன் பிரிவினைச் சபைகளாய் விளங்குகின்றன. அவையாவன,




கொஸ்நர் நற்செய்தி லூத்தரன் சபை
ஜெய்ப்பூர் நற்செய்தி லூத்தரன் சபை
ஆந்திரா நற்செய்தி லூத்தரன் சபை
வடக்கு ஆந்திரா நற்செய்தி லூத்தரன் சபை
தென் ஆந்திரா நற்செய்தி லூத்தரன் சபை
ஆர்க்காடு நற்செய்தி லூத்தரன் சபை
தமிழ் நற்செய்தி லூத்தரன் சபை
மத்திய இந்திய, தென் இந்திய லூத்தரன் சபைகளாகும்.

**அங்கிலிக்கன் சபை I:I :**

அங்கிலிக்கன் சபையானது, 16ம் நூற்றாண்டிலே இங்கிலாந்து அரசர் 8ம் ஹென்றியினால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்து அங்கிலிக்கன் சபையால் 1799ல் உருவாக்கப்பட்ட "திருச்சபை மறைபரப்பு சபை" ஆல்

30ம் பக். பார்க்க ........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மா**ர்கழி மாதம்: இரண்டு நாட்கள் பெய்த அடைமழை விட்டிருந்து, வெயில் நன்றாக எறி(ரி)த்தது. குடிசையின் தாழ்வாரத்தில் நனையாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகுக்கான கட்டைகளை கோடரியால் பிளந்து கொண்டிருந்தான் இயேசுராஜ். சைக்கிளில் விறகுகளைக் கட்டிக்கொண்டு உன்னிச்சையில் இருந்து மட்டக்களப்பு புறநகர்ப்பகுதிகட்குச் சென்று விற்பதுதான் அவனின் தொழில். ஒரு சைக்கிள் லோட் ஆயிரம் ரூபாய். முன்புபோல் காட்டில் காய்ந்த மரங்களைக் கூட வெட்டவிடுகின்றார்கள் இல்லை. இந்த விறகுகள் கூட உன்னிச்சைக் குளம் வற்றி நீர் மட்டம் கரைகளில் குறைந்திருக்கும்போது வெளிப்படும் பட்டமரங்களை வெட்டியெடுத்தவைதான்.

"இந்தா ..... தேத்தண்ணியக் குடி...."

என்று இயேசுராஜின் மனைவி அவனிடம் தேநீரைக் குடிக்கக் கொடுத்தாள்.

அதை வாங்கிக் கொண்ட அவன், வெளிக்கொடியில் இருந்த பழைய துவாயை உதறி வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

ஐம்பத்து மூன்று வயதாகியும் உறுதிவாய்ந்த கன்னங்கரேலென்ற அவனின் உடல் வெயிலில் பளபளத்தது. எனினும் பத்து நாட்கள் வைரஸ் காய்ச்சலால் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் தங்கியிருந்த அவன், சற்று தளர்ந்துதான் காணப்பட்டான்.

"கொள்ளிய எப்பிடி டவுனுக்குக் கொண்டு போகப்போறா......? நேத்து கண்டுமணியின்ர புருசன ஆயித்தியமலப் பொலிஸ் புடிச்சிக் கோட்டுல போட்டுஆயிரம் ரூவா தண்டமாம்..."

என்று கவலையுடன் கேட்டாள் இயேசுராஜின் மனைவி அந்தோனியம்மா.

"என்ன செய்யிற.... இயக்கம் இருக்கக்குள்ள காசக் கட்டினா பேமிட் ....... எவ்வளவு காய்ஞ்ச கொள்ளியும் காட்டுல வெட்டலாம். நான் பொடியனா இருக்கக்குள வண்டில்ல கொள்ளிய கட்டிட்டுச் செங்கலடி கறுத்தப்பாலத்தால போனா, ஏறாவூரில விக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




வண்டில் விறகு முப்பத்தஞ்சு ரூவா. 'பொறஸ்காட்' மறிச்சா, இரண்டு ரூவா கொடுத்தாப் போதும். இப்ப, கறுத்த பாலத்தாலயும் போகேலா..... ஆயித்தியமலப் பொலிசடியாலும் போகேலா...."

"என்ன செய்யிற.....?"

"அதுக்கொரு வழியிருக்கு..... இரவு பன்னிரண்டரபோல வெளிக்கிட்டா.... வரப்புக் காட்டால ஓடி, உள் றோட்டால மாறிப் போனா பெரிய கண்ணகை அம்மன் கோவிலடிக்கு மூண்டு மணிக்கெல்லாம் போயிடலாம். கோயிலடியில ஒரு நாலர வரையிலும் கண்ணயந்திட்டு, இருட்டோட இருட்டா வெளிக்கிட்டா வலயிறவுப் பாலத்தால போயி, புறவு புதுப்பாலத்தால போனா இருதயபுரத்துக்கு ஆறுமணிக்கெல்லாம் போகலாம். இருதயபுரம் மாஸ்டர் ஆக்கள் விறகுக்குப் பாத்துட்டு இருப்பாங்க.... அவங்கட்ட 'சொலிட்' காசு....... நீ ஆறுமணி டவுன் பஸ்ஸ புடிச்சிட்டு மட்டக்களப்பு பஸ் ஸ்டான்டில நில். நானும் வாறன். புள்ளகளுக்கு நத்தார் சாமான் வாங்குவம்..... வரக்குள்ள எடுத்த சீட்டுக் காசயும் கொண்டா...."

"வலயிறவுப் பாலத்தில மறிக்கமாட்டாங்களா....?"

"ஊருக்கொரு சட்டம்புள்ள.... வலயிறவுப் பாலத்தில நேவிக்காரன் என்னவெண்டும் கேக்கமாட்டான்...."

அன்று பின்னேரமே சைக்கிளில் ஒழுங்காக விறகை அடுக்கி, பொலித்தீன் கடதாசியால் அதை மூடி, சைக்கிள் ரயருக்குக் காற்றடித்து, 'சைக்கிள் பம்மையும்' சைக்கிளில் கட்டி, ரோச் லைட்டைச் சரிபார்த்து எல்லாம் ஆயத்தமான பின்னரே பாயில் சுருண்டான் இயேசுராஜ்.

இரவு பன்னிரெண்டரை. இயேசுராஜ் சைக்கிளைத் தள்ளி வெளிக்கிட்டான்.

"கவனமாப் பொயித்துவா.... வழியப்பாத்துப் போ.... பூச்சிபட்ட கிடக்கும்.... பொலிசுக்காரனக் கண்டா ஓடாத.... சுட்டுப்போடுவானுகள்........ மாதாவ நெனச்சித்துப் போ......."

வரம்புக்கட்டால சைக்கிள் செல்லும் போது வரம்புக்காட்டில் ஏதோ பளிச்சிட்டது. உற்றுப்பார்த்தான்: புடையன் பாம்பு. ஆனால், சைக்கிள் ஓட்ட அதிர்வில் அது ஓடிவிட்டது. ஆங்காங்கே தண்ணீர் ஓடிய அடையாளம்; நிலம் ஈரலிப்பு. இறங்கிச் சைக்கிளைத் தள்ளிப் பின்னர் ஏறி .... எதிரே தார் ரோட்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'அந்தத் தார்ரோட்டத் தாண்டினாச் சரி..... இன்னும் பத்துக்கட்ட ஓடினா கண்ணகி அம்மன் கோவில்..... சிலவேள மட்டும் ரோட்டுப் பக்கம் பொலிஸ் வரும். .... ஆனா, இருட்டுக்க வரமாட்டாங்க ...... இயேசப்பா நீங்கதான் பொறுப்பு......'

என்று மனதிற்குள் நினைத்தவாறு தார்ப்பாதையைக் கடந்தான்.

நள்ளிரவு ஒன்று முப்பது. சார்ஜன் பண்டாரவும், கொஸ்தாபல் ஜெகத்வீரவும் இரவு ரோந்து சென்றுகொண்டிருந்தனர். ஜெகத் சொன்னார்,

"மகத்தய்யா ...... அந்தா கொள்ளிச் சைக்கிள் ஒண்டு ரோட்டக் கடந்து போகுது. மறிக்கயா....."

"சத்தம் போடாத..... அந்தாள் பயப்பிடப்போகுது..... இந்தச் சனங்கள் மிச்சம் நல்லதுகள். ஏழைகளுக்கு இதுதான் பிழைப்பு.... இலேசா பிடிச்சுப் போடலாம்....... அதுகள்ற சாப்பாட்டுக்கு நம்மளால வழிபண்ண ஏலுமா....?"

"பிழ பிழதானே சேர்......"

"இண்டக்கு நம்மட பெரிய மகத்தயாவுக்கு சின்ன மகத்தயா, இங்கு இருந்து என்ன கொண்டுபோனவர்...?"

"நத்தல் பார்ட்டிக்கு ...... மா.... இறச்சி கொண்டுபோனவர்......"

"அவர் செய்தது சரியென்டால் கொள்ளிச் சைக்கிள்காரன் செய்றது சரி; அவர் செய்தது பிழையென்டால் இவனும் செய்யிறது பிழை. நம்மட சட்டங்கள் சரி: அது பாயுற இடங்கள்தான் சிலவேள பிழ"

ஜெகத் ஒன்றும் பேசவில்லை.

இதற்கிடையில் விறகுச் சைக்கிள்காரன் இருட்டோடு இருட்டாய் மறைந்துவிட்டான். முன்னால் மட்டும் மெல்லிய ஒளிப்பொட்டாய் ரோச் வெளிச்சம்.

காலை ஆறு மணிக்கெல்லாம் இயேசுராஜ் இருதயபுரம் சென்று கொள்ளியைப் பறித்துவிட்டான். வழமையைவிட பத்து மைல் சுற்றி வந்ததாகச் சொன்னான்: பட்ட கஷ்டத்தைச் சொன்னான்.

மாஸ்டர் ஆயிரத்து இருநூறு ரூபாய் கொடுத்தார். அத்துடன் இரண்டு புதிய புத்தகப் பைகள், இரண்டு டசின் கொப்பிகள், புதிய சீருடைத் துணிகள் என்பவற்றையும் கொடுத்துச் சொன்னார்,

"இண்டக்கி நீ சொன்னமாதிரி இயேசுநாதர்தான் உன்னக் காப்பாற்றினார். அவருக்கு நீ கனக்கக் கஷ்டம் கொடுக்க வேணாம். நெடுக அவர் காப்பாற்ற மாட்டார். அவர் எப்படிக் காப்பாற்றினார் என்று உனக்கும் தெரியாது; எனக்கும் தெரியாது. சட்டத்த மீறுவது எப்பவும் பிழ. வேறு எவ்வளவோ தொழில்கள் இருக்கு முயற்சி பண்ணிப்பார்....."

"சரி சேர் ......"

என்று சொன்னவாறே ஆழ்ந்த யோசனையுடன் வெற்றுச் சைக்கிளைத் தள்ளினான்.

**(யாவும் கற்பனை)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்

உலகில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் அமெரிக்காவில் அமைந்துள்ள ஜோர்ச் பல்கலைக்கழகந்தான். ஆனால், இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் நகரில் அமைந்துள்ள 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகம் பிரபல்யமானதும் மிகப் பழமையானதுமாகும்.

இங்கு, ஆங்கில மொழியூடாகக் கல்வி வழங்கப்படுகிறது. இது, 12ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அறிஞர்களும், மாணவர்களும் ஒன்றுகூடும் இடமாக இது விளங்கியது.



13ம் நூற்றாண்டில், பல கொடை வள்ளல்களின் உதவிகளால், கல்லூரிகள் (Colleges) பல அங்கு உருவாகின. 15ம் நூற்றாண்டு மறுமலர்ச்சியுடன் மதகுருமாரின் ஆதிக்கத்தில் இருந்து இவை தம்மைத் துண்டித்துக் கொண்டன. அங்கு பெரியதொரு நூலகமும் உருவாக்கப்பட்டது. 20ம் நூற்றாண்டில் விஞ்ஞானக் கல்வி மேம்படுத்தப்பட்டு, ஆய்வுகூடங்களும் நிர்மாணிக்கப்பட்டன. 1878ல் பெண்களுக்கான கல்லூரி உருவாக்கப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட மொத்தம் 39 கல்லூரிகளை உள்ளடக்கிய கூட்டு நிறுவனமே ➡






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு நாள் கொண்டாடப்படுவதை தொடக்ககாலத் திருச் சபை அத்துணை ஆதரிக்கவில்லை. அன்றி ருந்த கலாபனைச் சூழலிலும் யூத மத பாரம் பரியத்தின் பின்னணியிலும் இது கவனிக்கப் படவில்லை. அத்துடன் எளிமையாகப் பிறந்த இயேசுவின் பிறப்பை ஓர் அரசனின் பிறப்பு போல் எப்படிக் கொண்டாடலாம்? என்று ஒரிஜன் போன்ற திருச்சபைத் தந்தையர் கேள்வி எழுப்பினர். இயேசு எப்போது பிறந் தார் என்பது எவருக்குமே தெரியாது. ஆனா லும் கி.பி 200ம் ஆண்டளவில் எகிப்தில் கிறிஸ்து பிறப்பு தினம் முதலில் கொண்டாடப் பட்டது.

கிறிஸ்துவின் பிறப்பு அகஸ்டசின் 28வது ஆண்டில் மே 20 என்று சில எகிப்திய இறை யியலாளர்களும் வேறு சிலர் மே 30ல் இடம் பெற்றதாகவும் கூறியுள்ளனர். கிறிஸ்து பிறப்பு பற்றி நற்செய்திகள் தரும் ஆதாரங்களை வரலாற்றுப் பின்னணியில் ஆராய்ந்த அறிஞர் கள் தற்போதுள்ள கணிப்பிலிருந்து ஏழு ஆண்டு களுக்கு முன்பாக இது நிகழ்ந்திருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர். தற்போது, டிசம்பர் 25ம் நாள் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் வழக்கம் உரோமர் மத்தியிலிருந்த வெல்ல முடியாதவரின் பிறப்பு எனும் ஒளியின் சடங்கு நாளிலிருந்து உள்வாங்கப்பட்டது. உலகின் ஒளியான கிறிஸ்துவை, 'நானே உலகின் ஒளி' என்று உறுதிபடக் கூறிய இயேசுவின் பிறப்பை, உரோமர்களின் பாரம்பரிய ஒளிவிழா நாளான டிசம்பர் 25ம் நாளில் கொண்டாடுவது பொருத்த மானதே!

➡

"ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்" ஆகும். இவை தனித்தனித் தலைவர்களையும் நிர்வாகக் குழுவையும் கொண்டுள்ளன.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரி கள் 'Oxonians" என அழைக்கப்படுவார் கள். இப்பல்கலைக்கழகத்தால் வழங்கப் படும் பட்டங்கள் **B.A (OXON), M.A. (OXON)** என்றவாறு குறிக்கப்படும்.

ஒக்ஸ்போர்டில் 16 பீடங்கள் (Faculties) இயங்குகின்றன. 1902ல் இருந்து வெளி நாட்டு மாணவர்களும் இங்கு வந்து கல்வி பயில்வதற்காக Rhodes Scholarship என்ற புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. புகழ் பெற்ற அரசியல்வாதி ஒருவர் பல்கலைக் கழக வேந்தராக (தலைவராக) இயங்குவார். இவரது பதவி ஆயுள் முழுவதுமாகும். உபவேந்தர் நான்கு வருடங்களுக்கொரு முறை தெரிவுசெய்யப்படுவார். இவரே உண்மையான நிர்வாகத் தலைவராவார். இங்கு, 1478ல் ஒக்ஸ்போர்ட் அச்சகமும் (Oxford University Press) இயங்கி வருகி றது. **"Oxford English Dictionery"** என்ற ஆங்கில அகராதி கூட இங்குதான் அச்சி டப்படுகிறது. இது உலகப் புகழ்பெற்ற அகராதியாகும்.

- வயலெற் சந்திரசேகரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

■ றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலைவிரிவுரையாளர்
மொழித் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

**குறவஞ்சி :**

தமிழில் அமைந்துள்ள சிற்றிலக்கிய வகைகளுள் குறவஞ்சியும் ஒன்றாகும். இது, பாடல் நாடக வடிவமாகவும் அடையாளப் படுத்தப்படும் இலக்கியவடிவமாகும். பள்ளு இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவர்களாக கடவுளர், மன்னர், பிரபுக்கள் முதலானோர் இருப்பினும் பள்ளர், பண்ணைக்காரன் முதலிய சாதாரண மக்களும் முக்கிய இடம் வகிப்பதைப் போலவே குறவஞ்சியிலும் கடவுளர், மன்னர், பிரபுக்கள் முதலானோர் பாட்டுடைத் தலைவர்களாக இருப்பினும் சாதாரண மக்களாக உள்ள குறவரும் இதில் முக்கிய பாத்திரங்களாக அமைவர்.




குறவஞ்சி இலக்கியம் ஒரு கதை யமைப்பினைக் கொண்டமைந்தது. பாட்டு டைத் தலைவன் உலாவரும்போது அவனைக் கண்டு அவன்மீது காதல் கொள்ளும் தலைவி, அவனை அடைய எண்ணுகின் றாள். அவனது நினைவில் ஏக்கமுற்றிருக்கும் அவளைச் சந்திக்கும் குறவர் குலப் பெண் ணொருத்தி (சிங்கி என இவள் அழைக்கப் படுவாள்) அவளைத் தலைவன் திருமணம் செய்வான் எனக் குறி கூறுவாள். இதனால் மனம் மகிழும் அத்தலைவி, பொன் பொருள் உட்பட பல பரிசுகளை இக்குறத்திக்கு அளிப்பாள். குறத்தி மனமகிழ்வுடன் செல்லும் வழியில் அவளை அவளது கணவனான சிங்கன் காணுகிறான். அவள் அணிந்துள்ள ஆபரணங்கள் மற்றும் அலங்காரங்களைக் கண்டு அவன் வினவ அவள் தலைவியைச் சந்தித்தமை பற்றிக் கூறி தான் குறிசொன்ன மையையும் குறிப்பிடுவாள். பின் இருவரும் பாட்டுடைத் தலைவனின் புகழைப் பாடுவர். இதுவே குறவஞ்சி இலக்கியத்தின் பொதுவான கதையம்சமாகும்.

தமிழில் திருக்குற்றாலக் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, சரபேந்திரப் பூபாலக் குறவஞ்சி, விராலி மலைக் குறவஞ்சி முதலான பல குறவஞ் சிகள் இயற்றப்பட்டுள்ளன. இலங்கையிலும் நகுலமலைக் குறவஞ்சி, நல்லைக் குறவஞ்சி, வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி முதலான குறவஞ்சிகள் இயற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**நூலாசிரியர்:**

பெத்லகேம் குறவஞ்சி என்னும் நூலினை இயற்றியவர் வேதநாயகசாஸ்திரி (1774 – 1864) ஆவார். 1774 செப்டம்பர் 07ம் திகதி தமிழ்நாடு திருநெல்வேலியில் வேளாளர் மரபில் தேவசகாயம் - ஞானப்பூ ஆகியோருக்கு மகனாகப் பிறந்த இவர், 1784இல் திருநெல்வேலிக்கு வந்த சீர்திருத்த கிறிஸ்தவ சபைக் குருவாகிய சுவார்ட்ஸ் பாதிரியாரால் கல்வி கற்பதற்காகத் தஞ்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தஞ்சையில் அமைந்திருந்த தரங்கம்பாடிக் கல்லூரியில் பின்னாளில் மன்னராக ஆகிய சரபோஜியுடன் கல்வி கற்றார். பின்னர் இப் பாடசாலையின் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றினார்.

தனது பன்னிரண்டாவது வயதிலேயே செய்யுள்களை இயற்றும் வல்லமை பெற்றிருந்த இவர், சுவிசேஷக் கவிராயர், வித்தகக் கவிஞர், விவிலிய அறிஞர், ஞானதீபக் கவிராயர் முதலான சிறப்புப் பட்டங்களையும் பெற்றிருந்தார். சைவ வைஷ்ணவ கதாப் பிரசங்க (கதா கலாட்சேபம்) முறையைக் கிறிஸ்தவ மதம் பரப்புதலுக்கு இவர் பயன்படுத்தினார். 1811 இல் இவர் தன் குடும்பத்தினருடன் மதம் பரப்புதலுக்காக இலங்கைக்கு வந்து தங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

1820இல் சரபோஜி, மன்னனாக முடிசூடியபோது இவர் வாழ்த்துப் பா பாடியதாகக் கூறப்படுகின்றது. இவரது புலமையைக் கண்டுமனம் மகிழ்ந்த மன்னன், தான் வணங்கும் பிரகதீஸ்வரர் மீது குறவஞ்சி பாட வேண்டியபோது 'கிறிஸ்துவையன்றி வேறு எத் தெய்வத்தினையும் தான் புகழ்ந்து பாடமாட்டேன்' என அவர் மறுத்ததாகவும் அதனால் இவ்விருவருக்குமிடையில் சிறிது மனவேறுபாடு ஏற்பட்டதென்றும் கூறப்படுகின்றது.

பக்தி வைராக்கியம் மிக்க இவர் அதிக எண்ணிக்கையிலான கிறிஸ்தவப் பாடல்களை இயற்றியுள்ளார். தென்னிந்தியத் திருச்சபையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் தமிழ்க் கீர்த்தனைப் பாடல்களில் அதிகமானவை இவருடையன எனக் கூறப்படுகின்றது.

**உதாரணம்:**

மனுவுருவானவரைத் தோத்தரிக்கிறேன் – மோட்ச
வாசலைத் திறந்தவனைத் தோத்தரிக்கிறேன்
கனிவினைத் தீர்த்தவனைத் தோத்தரிக்கிறேன்
யூதக் காவலனை ஆவலுடன் தோத்தரிக்கிறேன்
வேறு எவரையும் தோத்தரியேன்

இப்பாடல் இன்றும் பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் அவரால் எழுதப்பட்டதென்பர். சில நூல்களே அச்சிடப்பட்டுள்ளன. அவற்றுள் பெத்லகேம் குறவஞ்சி, சென்னைப் பட்டணப் பிரவேசம் (குறு நாடகம்), ஞானத் தச்சன் (நாடகம்),

**உலகொளிர வந்தநிலா இருளில்**
**உன்மத்தம் பிடித்தவரோ மருளில்**
**அழகொளிரப் பிறந்தமகன் அருள்பருகும் பெரும்பேறு**
**ஆயர்மனம் வாய்த்தோர்க்கே கூறு!**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




வண்ண சமுத்திரம், அறிவானந்தம், ஆதியானந்தம், ஆரணாதிந்தம், ஞானக் கும்மி, பராபரன் மாலை, ஞானவுலா ஆகியன குறிப்பிடத்தக்கன.

**பெத்லகேம் குறவஞ்சி**

வேதநாயக சாஸ்திரி தனது 25வது வயதில் இயற்றியதே பெத்லகேம் குறவஞ்சி என்னும் நூலாகும்.

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் உள்ள பெத்லகேம் இயேசுக் கிறிஸ்து பிறந்த இடமாகும். பெத்லகேம் கிறிஸ்தவர்களின் பாரம்பரியத்தில் புனித பூமியாகும். எனவே, பெத்லகேம் நகரை மையமாகக் கொண்டு கிறிஸ்துவினதும் கிறிஸ்தவத்தினதும் பெருமைகளைக் கூறுவதாக இக் குறவஞ்சி அமைகின்றது. குறவஞ்சி என்ற இலக்கிய வடிவத்தை இந்த விடயத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக இவர் பயன்படுத்தியுள்ளார்.

பெத்லகேம் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவர் இயேசுக் கிறிஸ்து ஆவார். தேவமோகினியாகிய தலைவியாக சீயோன் மகள் உருவகிக்கப்பட்டுள்ளாள். இது முற்றுருவக முறையில் அமைந்த குறவஞ்சியாகும். தலைவியாக சீயோன் மகளும் (திருச்சபை), சிங்கனாக (குறவன்) குருவும், பறவைகளைப் பிடிக்கும் நூவனாக உபதேசியும், அவர்கள் பிடிக்கும் பறவைகளாக மக்களும், அதற்குப் பயன்படும் வலையாக இறைவாக்கு என்னும் நற்செய்தியும் குறத்தி குறி கூறுதல் தீர்க்கதரிசனமாகவும் இங்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

**கதையமைப்பு:**

இக்குறவஞ்சியில் இயேசுவின் வருகை பற்றிய விடயத்தினை அறிவிக்கும் கட்டடியக்காரனாக யோவான் வருகின்றார். இயேசு உலாவரப்போகும் செய்தி அவரால் அறிவிக்கப்படுகின்றது. இயேசுவின் பெருமைகள் அவரால் விளக்கப்படுகின்றன. அவற்றைக் கேட்கும் மக்கள் அவரை வரவேற்க ஆயத்தமாகின்றனர். எருசலேம் நகர் அலங்கரிக்கப்படுகின்றது. நகர மக்களுடன் வானதூதர்களும் வானுலகத்தோரும் திருச்சபை மக்களும் ஆயத்தமாகின்றனர். இயேசு உலாவரும்போது மக்கள் இலைக் கொத்துகளை அசைத்துக்கொண்டு மகிழ்ச்சியின் கீதமாகிய ஓசான்னா பாடுகின்றனர். சீயோன் மகள் என்னும் தேவ மோகினி (திருச்சபையின் உருவகம்) அவர் மீது காதல் கொள்கின்றாள்.

(தொடரும் .....)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமய வேறுபாடு இல்லாமல் இன்று எல்லோரும் கட்டிக் கொள்ளும் சாரனை தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்தவர்கள் கிறிஸ்தவர்கள்தான். சென்னையை அடுத்த பழவேற்காட்டில் 17ம் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் ஜாவாவிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து சாரன்களைத் தயாரித்தனர். சாரனை தமிழ் நாட்டில் 'கைலி' என்பார்கள். 'கைலி' என்பது உருதுச்சொல். ஆயினும் தமிழிலும் அச்சொல் உண்டு. சாமி சிலைகளுக்கு இடுப்பில் சுற்றும் வேட்டியைக் கைலி என்றார்கள். "அழகிய மணவாளப் பெருமாள் சாத்தியருளின கைலி" என்று 'கோயில் ஒழுகு' என்னும் (திருவரங்கம் கோயில் நடைமுறை பற்றியது) நூல் கூறுகிறது. சாரனை 'லுங்கி' என்றும் கூறுவர். 'லுங்கி' என்பது பாரசீகச் சொல். தமிழிலும் அப்படியே வழங்குகிறது எனினும் மலேசியாவிலும் இலங்கையிலும் தமிழர்கள் மத்தியில் சாரன் என்பதே பெரு வழக்காகும்.




# அஞ்சலித்தோம்!



## அமரர் திரு. ஜோசப் பெஞ்சமின்

மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றிய திரு. பெஞ்சோ அவர்கள் கடந்த ஒக்டோபர் மாதம் 20ம் திகதி காலமானார்.

1991ம் ஆண்டு மட்டக்களப்பு மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தில் வாகன ஓட்டுனராக இணைந்துகொண்ட அவர், பின்பு மறைமாவட்டத்தின் பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டுப் பங்களித்தவர். எப்போதும் உற்சாகமும் உதவிசெய்யும் மனப்பாங்கும் கொண்டவராக விளங்கிய பெஞ்சோ அவர்களது மறைவு கவலை தருவதாகும்.

அண்மைக்காலமாக உடல் நோயுற்றிருந்து வாழ்வை முடித்துக்கொண்ட அன்னாருக்கு நல்லமைதியும் நிறைவாழ்வும் கிடைக்கவேண்டுமென இறைஞ்சுவதோடு அவரது துணைவியார், இரண்டு பிள்ளைகள் மற்றும் குடும்பத்தவர் அனைவருக்கும் இறைவன்தாமே ஆறுதலும் தேறுதலும் அளித்துக் காத்து வழிநடத்த வேண்டுமென மன்றாடுகின்றோம்.

- தொண்டன் குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# வீட்டு வைத்தியம்

# பற்களைப் பாதுகாத்தல்!

முகத்திற்கு அழகு தருவது சிரிப்பு. சிரிப்பை அழகாக்குவது வெண்மையான பற்கள். வெண்மையான பற்கள் ஆரோக்கியத்தின் அடையாளமாகும். அது அடுத்தவரைக் கவர்ந்துவிடும்.

சிலருக்குப் பற்கள் அடுக்கிவிட்டது போல் வரிசையாக, வெண்மையாக, அழகாக இருக்கும். எல்லோருக்கும் அப்படி அமைவதில்லை. ஆனால், எல்லோருமே பற்களைச் சுத்தமாக, ஆரோக்கியமாக வைத்திருக்கலாமல்லவா...? பெரும்பாலும் அக்கறையின்மையாலும் சோம்பேறித்தனத்தாலும் பற்களைச் சுத்தமாகப் பேணாததாலும் இளவயதிலேயே ஓட்டைப் பற்களும் சொத்தைப் பற்களும் அழுக்கடைந்த பற்களுமாக பல நோய்களோடு அலைய வேண்டி நேரிடுகிறது. பற்சுகாதாரமின்மை உடலில் பல்வேறு நோய்கள் தோன்றவும் காரணமாகி விடலாம். ஆகவே, அழகாக, ஆரோக்கியமாக இருக்க விரும்பும் ஒவ்வொருவரும் பற்சுகாதாரத்தைப் பேணுவது அவசியம்.

- பழுக்காத கொய்யா, கரட், வெள்ளரிக்காய் போன்றவற்றை கடித்துச் சாப்பிட்டுவந்தால் உமிழ்நீர் அதிகம் உற்பத்தியாகி பக்டீரியாக்களை அழிப்பதோடு பற்களையும் சுத்தமாக்கி வெண்மை நிறப் பற்களாக மாற்றிவிடும்.


- பற்களைத் துலக்க எல்லாவிதமான பற்பசைகளையும் உபயோகிக்கக்கூடாது. ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பாவிக்க வேண்டும்.

- பற்களைத் துலக்கும்போது மிகவும் அழுத்தித் தேய்க்காமல் மேலும் கீழும் பக்கவாட்டிலும் ஒவ்வொரு பக்கமாக நிதானமாக, மென்மையாகத் துலக்க வேண்டும். அடிக்கடி பற்தூரிகையை மாற்ற வேண்டும்.

- ஏதாவது சாப்பிட்டவுடன் வாயில் தண்ணீர் ஊற்றிக் கொப்பளிப்பதால் பற்களுக்கிடையே இருக்கும் உணவுத் துணிக்கைகள் விழுந்து விடும்.

- ஒரு கரண்டி எண்ணெயில் கொஞ்சம் உப்போ அல்லது இரண்டு மூன்று கரண்டி எலுமிச்சைச் சாற்றையோ கலந்து எல்லாப் பற்களின் மீதும் மென்மையாக மசாஜ் செய்தால் பற்கள் உறுதி அடையும்.

- எலுமிச்சைப் பழத்தோலை பற்களின் மீது தேய்த்தால் பற்கள் பளிச்சென்று பிரகாசமாக இருக்கும்.



ஆனந்த சித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# என்னிலே பிறந்திடு!

தூற்றுதல் அகற்றி போற்றுதல் பெருகிட
தூயபாலனே என் நாவில் பிறந்திடு

தீயதைக் கேட்காமல் தூயதைக் கேட்டிட
திருப்பாலனே என் செவியினில் பிறந்திடு


அடிப்பதைக் குறைத்து அணைப்பதைக் கூட்டிட
அன்புப் பாலனே என் கரமதில் பிறந்திடு

பணத்தை விடுத்து பக்தியைப் பெருக்கிட
பரமபாலனே என்புத்தியில் பிறந்திடு

பொறாமையை அகற்றி பொறுமையை வளர்த்திட
பொற்பாலனே என்னிதயத்தில் பிறந்திடு

மனிதம் போற்றும் மனிதனாக வாழ்ந்திட
மனுவுருப்பாலனே என்னில் பிறந்திடு.

ரஜனி ஈஸ்வரன்,
இருதயபுரம்.



- பல் ஈறுகளில் புண் ஏற்பட்டால் சிறித ளவு பச்சை நன்னாரி வேரை அரைத்து அரைக்கப் தண்ணீரில் கலக்கிக் குடித் தால் ஆறிவிடும்.

- துத்தி இலையையும் அதன் வேரையும் சுத்தம் செய்து கஷாயம் வைத்துக் கொப்பளித்து வந்தால் பல்லில் உள்ள எல்லா வியாதிகளும் குணமாகும்.

- பருப்பு நீக்கிய பேரீச்சம் பழங்களை ஒரு கிண்ணத்தில் போட்டு மூன்று மணிநேரம் நீரில் ஊறியபின் எடுத்துச் சாப்பிட்டால் பற்கள் பலம் பெறும். ஆட்டங்கொடுக்கும் பற்கள் கூட கெட்டியாகும்.

- பல் கூச்சம் இருந்தால் கீழா நெல்லியின் வேரை வாயில் போட்டு இரண்டு நிமிட நேரம் மென்றால் போதும். உடனே பல் கூச்சம் மாறும்.

- பூச்சிப் பல் வலிகள் இருந்தால் பலா மரத்தின் காய்ந்த இலையைச் சுருட் டுப்போல் சுருட்டி அதன் முனையைப் பற்றவைத்து, புகையை வாய்க்குள் இழுத்து அடக்கி வைத்திருக்க வேண்டும். புகையை விழுங்கக் கூடாது. இந்தப் புகை பூச்சிப் பல் தொல்லைகளை மாற்றும்.

பல் வலியையும் பல் நோயையும் குணப்படுத்தும் ஆற்றல் கடுக்காய்க்கு உண்டு. கடுக்காய்த் தோலை சாம்பலாக்கி தினமும் இரண்டு வேளை தேய்த்து வந்தால் பல ஈறுகளில் உள்ள புண் குணமாகும். பற்கள் உறுதிப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வரோக நிவாரணியாகும் அன்னாசிப்பழம்



அன்னாசிப் பழத்தில் உடலுக்குத் தேவையான பல்வேறு விட்டமின்களும் கனியங்களும் (*Minerals*) அடங்கியுள்ளன. கல்சியம், பொட்டாசியம், நார்ச்சத்து, பொஸ்பரஸ், ஸிங்க் மற்றும் விட்டமின் *A, B1, B2, B3, B6, C* முதலியன இதில் அடங்கும். இதில் கொழுப்புச் சத்து மிகமிகக் குறைவு. அதனால் கொலஸ்றால் குறைவு. இப்பழத்தின் மிக முக்கியமான பலன், ஆரோக்கியமான எலும்புகளை உருவாக்க உதவுவது. ஏனெனில், இதில் மங்கனிஸ் என்ற சத்து அடங்கியுள்ளது. தடுமல், இருமல் முதலியவற்றுக்கு இதன் சாறு தோடம்பழத்தின் சாறுபோலவே உதவுகிறது.



அத்துடன் இதில் புரோமிலயின் என்ற சத்தும் அடங்கியுள்ளது. இச்சத்து தடுமலைக் குறைப்பதுடன் சளியையும் இலகுவாக்குகிறது. மேலும் இச்சத்து இரத்தத்தில் கட்டி (*Blood Clot*) உண்டாவதையும் தடுக்கிறது.

மேலும், தைரொயிட், டிஸ்பெப்சியா, இருமல், உயர் இரத்த அழுத்தம், மூட்டு வாதம் முதலியவற்றையும் அன்னாசிப்பழம் தடுக்கிறது. புதிய அன்னாசிப்பழத்தின் சாறு, குடற் புழுவை அகற்றுவதுடன் நோய் தொற்றுவதிலிருந்தும் பாதுகாக்கிறது. அத்துடன் ஆயாசம், மலசலக் கோலாறு, மலச்சிக்கல் முதலியவற்றிலிருந்தும் சுகம் அளிக்கிறது.

அன்னாசிப்பழத்தின் நன்மைகளைப் புதிய பழங்களிலிருந்தும் தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்களிலிருந்தும், குளிரூட்டியில் வைக்கப்பட்ட பழங்களிலிருந்தும் பெறலாம். அன்னாசித் தண்டில் 7 வகையான நன்மை தரும் கூறுகள் அடங்கியுள்ளன. இவை, சில வகைப் புற்றுநோய்களுக்கு (கர்ப்பப் புற்று, மார்புப் புற்று, சுவாசப் புற்று, மூலப் புற்று, தோல் புற்று) எதிராகச் செயற்படுவதாக அவுஸ்திரேலிய ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

(**ஆதாரம்** : ......... ஆத்மீக சஞ்சிகை, செப்டம்பர் 2009 - பக். 10)

**– அருள்மணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இந்த உலகத்தில் நல்லது - கெட்டது, நன்மை - தீமை, விஷம் - அமிர்தம், இன்பம் - துன்பம் என்று அனைத்தையும் இரு துருவ முரணாகப் பார்த்தே பழகியிருக்கிறோம். ஆனால், இந்த முரண்பாட்டை காலமும், சூழ் நிலைகளும் கையாளும் முறையுந்தான் தீர்மானிக்கின்றன. இவ் வுலகத்தில் நிலையான நன்மை தீமையோ, சரி பிழையோ இல்லை என்பது சிந்தனையாளர் களின் கூற்று. உண்மையில் இது புதிய கருத்தல்ல. பழையதுதான். 'அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு' என்பது பழமொழி. அமிர்தம் சாகாமையைத் தரும் தேவர் உணவு. நஞ்சு சாவைத் தரும் ஒரு பொருள். சாகாமையைத் தரும் அமிர் தத்தையும் அளவு மீறி உண்டால், வருவது சாவு எனின், அமிர்தமே நஞ்சா கிறதல்லவா...? அது, நாம் கையாளும் அளவைப் பொறுத்து அமைந்துவிடுகிறது. அதுபோல், 'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்பதும் ஒரு பழமொழிதான். ஏனெனில், பாம்பிடம் உள்ள நஞ்சு கொடியது. பாம்பு கடித்தவுடன் நஞ்சு இரத்தத்தில் பரவி, நரம்பு மண்டலங்களைப் பாதித்து ஆளைக் கொன்றுவிடுகிறது.

போரில் தோற்ற செய்தி கேட்டதும் கிரேக்கப் பேரழகி கிளியோப்பட்ரா 'பூநாகம்' என்னும் பாம்பைப் பயன்படுத்தித் தற்கொலை செய்துகொண்டாள் என்று வரலாறு கூறுகிறது. ஆனால், உண்மையில் ஆராயப்பட்ட 2400 வகையான பாம்புகளில் ஆக 8 சதவீதமானவை தான் விஷமுடையவை என கண்டறியப்பட்டுள்ளது என்பது வேறு விடயம்.

ஆக, நஞ்சு என்பது கொடியதுதான், உயிர் குடிப்பதுதான் என்பது உலகம் கூறும் உண்மை. ஆனால், இதற்கு மாற்றுக் கருத்தும் நிகழ்வுகளும் இல்லாமல் இல்லை.

தமிழ் நாவல் உலகின் முன்னோடியும் பிரபல பத்திரிகையாளரும், எழுத்தாளருமான 'கல்கி' அவர்கள் எழுதிய "பொன்னியின் செல்வன்" என்னும் புகழ்பெற்ற நாவலில் வரும் ஓர் எதிர்மறைப் பாத்திரம் 'வச்சிர நந்தி' எனும் புத்த பிக்கு. இவர் நஞ்சால் தன்னுடலைப் பாதுகாத்தவர். சிறுகச் சிறுக நஞ்சை உடலில் ஏற்றி வச்சிர தேகமாக மாற்றி வைத்தார். அவரைப் பாம்பு கடித்தால், பாம்புதான் இறக்குமே அன்றி, அவருக்கு ஒன்றும் ஆகாது. இது வெறும் கதைதானே என்று நீங்கள் நினைக்கலாம்.

பழங்காலத்தில் பெரும் சாம்ராஜ்ஜியங்களை ஆண்ட அரசர்கள் தங்கள் எதிரிகளை அழிக்க இம்முறையைப் பயன்படுத்தி உள்ளார்கள். அழகிய இளம் பெண்களைத் தெரிந் தெடுத்து, அவர்களின் உடலில் சிறுகச் சிறுக நஞ்சை ஏற்றி, அவர்களை நச்சு மரங்களா கவே மாற்றிவிடுவார்கள். பின் அவர்களை இரகசியமாக எதிரிகளிடம் அனுப்பிவைப்பார் கள். அவர்களது அழகில் மயங்கி, அவர்களோடு உறவுகொள்ளும் எதிரி மட்டுமல்ல, எந்த

- மலர்வேந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




ஆணும் நஞ்சேறி இறந்துவிடுவான். இவ்வாறு நஞ்சை, ஆக்கத்துக்கும் அழிவுக்குமான ஒரு பொருளாகவே பாவித்தார்கள்.

ஹோமியோபதி மருத்துவத்திலே நாஜா, லாச்சசீஸ் என்னும் மருந்துகள் உள்ளன. அவை பாம்பு விஷத்திலிருந்து தயாரிக்கப்படுபவை. இவை, தலைவலி, இதயம் சம்பந்தமான வியாதிகள், தொண்டை வியாதிகள், மூல வியாதிகள், சிரங்குகள், கட்டிகள் போன்ற பல்வேறு நோய்களைக் குணப்படுத்தக்கூடியவை. எனவே, அளவோடு முறையாகப் பாவித்தால் நஞ்சும் மருந்தாகலாம். அளவுக்கு மீறினால் அல்லது சரியாகப் பாவிக்காது போனால், மருந்தும் நஞ்சாகலாம்.

பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் கள்ளுண்ணுதல் சொல்லப்பட்டுள்ளது. திருவள்ளுவரும், "கள்ளுண்ணாமை" என்ற தலைப்பில் பத்துப் பாக்கள் கொண்ட ஓர் அதிகாரத்தையே எழுதிவைத்துள்ளார். கள்ளுண்ணுதலால் வரும் இழிநிலையை அதில் தெளிவாகக் கூறியுள்ளார். தமிழ் இலக்கியத்தில் எழுந்த அறநெறிக்கால நூல்களில் எல்லாம் மதுவால் வரும் கேடு பற்றி அதிகமாகவே சொல்லப்பட்டுள்ளன.

"குடி குடியைக் கெடுக்கும்", "குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு" என்பதெல்லாம் குடித்தலின் இழிவைப் பற்றி எழுந்த நாட்டுப் பழமொழிகள். ஏன், மதுவால் வரும் கேடுகள் பற்றி ஊடகங்களும், பத்திரிகைகளும் நாளும் பொழுதும் கூறிக் கொண்டே இருக்கின்றன. ஆனாலும்





என்ன? மதுக்கடைகளில் நடக்கும் வியாபாரம் போல் எந்தக் கடையில் நடக்கிறது? எப்படியிருப்பினும் மது உடலைக் கெடுக்கிறது; அறிவைச் சிதைக்கிறது; பல குடும்பங்களை அழித்திருக்கிறது என்பது உண்மைதான். அதேவேளை, நாம் பாவிக்கும் பெருமளவான மருந்துகளில் குறிப்பிட்டளவு மதுசாரம் கலக்கப்பட்டிருக்கிறது. அப்போதுதான் அவை வீரியத்தோடு செயற்படும்.

ஹோமியோபதி மருந்துகளில் 90 வீதமானவை மதுசாரத்தில் ஊறவைத்தே தயாரிக்கப்படுகின்றன. ஆயுள்வேத, சித்த மருத்துவ முறைகளில் சில மருந்துகளைத் தயாரிக்க அபின், கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆக, ஒரு பொருளை அல்லது ஒரு கருத்தை நாம் எதற்கு, எப்படி, என்ன அளவில் பாவிக்கப்போகிறோம்? எந்த இடத்தில், எந்தச் சூழலில் பாவிக்கப் போகிறோம் என்பதைப் பொறுத்தே அது நல்லதா, கெட்டதா என்பது தீர்மானிக்கப்படுகிறதே அன்றி என்றும் நன்மையானவை, என்றும் தீமையானவை என எதுவுமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனிதர்களை அறிவோம்...!

மார்கழி — 2013

- மற்றில்டா இராஜேந்திரம் -

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 புனித புளோரன்ஸ் புனித எல்கு | 2 புனித பிபியானா | 3 புனித பிரான்சிஸ் சேவியர் | 4 புனித யோவான் தமசேன் | 5 புனித அனத்தாசியஸ் புனித ஜெரால்ட் | 6 புனித நிக்கலஸ் | 7 புனித அம்புரோஸ் |
| 8 புனித மரியாவின் அமலோற்பவத் திருவிழா | 9 புனித சிராஸ் புனித பீற்றர் போரியர் | 10 புனித யுலாலியா புனித ரோமரிக் | 11 புனித முதலாம் டமசஸ் | 12 புனித குவாடலூப்பே அன்னை திருவிழா புனித ஜேன் பிரான்சிஸ் டி சன்டல் | 13 புனித லூசியா | 14 புனித சிலுவை ஜோன் |
| 15 புனித வலேரியன் புனித நினோ | 16   | 17 புனித லாசரஸ் புனித ஒலிம்பியர்ஸ் | 18 புனித றூவல் புனித சொசிமூஸ் புனித கேடியன் | 19 புனித நெமசியர் முத்திப்பேறு பெற்ற ஐந்தாம் ஏர்பன் | 20 புனிதர்களான ஏபிரகாம், ஐசக் ஜேக்கப் | 21   |
| 22 புனித பிலாவி புனிதர்களான சரேமனும், இசிரியனும் | 23 புனித கன்றி ஜோன் | 24 புனித ஹென்றி ஜோன் புனித அடெலி | 25   | 26 புனித ஸ்தேவான் | 27 நற்செய்தி யாளரும் திருத் தூதருமான புனித யோவான் | 28 புனிதர்களான மாசில்லாக் குழந்தைகள் |
| 29 திருக்குடும்பத் திருவிழா புனித தோமஸ் பெக்கட் | 30 புனித சபினார் | 31 புனித 1ம் சில்வெஸ்டர் | | | | |

## மார்கழி 16 : புனித அடலெய்ட்



**931ம்** வருடத்திலே பேர்கன்டி எனுமிடத்தில் வசித்துவந்த பிரபுக் குடும்பத்திலே இவர் பிறந்தார். இத்தாலிய அரசனான லோதய்ரை பதினாறு வயதிலே மணந்தார். மூன்று வருட இல்லறத்தின் பின் கைம்பெண்ணான வேளையிலே, அரசைக் கைப்பற்றிய 2ம் பெரெங்கரியசால் அதிகம் கொடுமைப்படுத்தப்பட்டார். இவர் துன்புற்ற வேளையிலே ஜெர்மனிய அரசன் $1^{ம்}$ ஒட்டோவால் விடுதலை செய்யப் பட்டார். பின்னர் இவரையே திருமணஞ் செய்து மூன்று ஆண் குழந்தைகட்குத் தாயுமானார். இதில் ஒரு மகன் தந்தைக்குப் பின் 2ம் ஒட்டோ எனும் பெயருடன் அரசனானான். அடலெய்ட் பெற்றிருந்த அறிவுக் கூர்மை எனும் கொடையால் அரச நிர்வாகத்திலும் ஈடுபட முடிந்தது. 962ம் வருடத்தில் பரிசுத்த பாப்பிறை 12ம் அருளப்பரின் கரத்தால் இவரும் கணவரும் முடிசூட்டப்பட்டனர். 973ம் வருடம் தன் கணவரின் மரணத்தின் பின் பல அனுபவங்களைப் பெற்றார். மகன் 2ம் ஒட்டோவும், அவன் மனைவியும் அரியணை ஏறிய வேளையில் இவருக்கு அவர்கள் இருவராலும் பிரச்சினைகள் ஏற்பட்டன. 983ம் வருடத்திலும் விசேடமாக 991ம் வருடத்திலும் இவரது பேரன் 3ம் ஒட்டோவுக்குப் பதிலாக ஆட்சி புரிந்தார். இவரது ஆட்சி தெளிவான, விவேகமான அத்துடன் அபூர்வமானதாக அமைந்தது. இப்புனிதமான பெண், ஏழைகளிடம் அளவிலா அன்பைக் காட்டினார். அத்துடன் கிளனி என்பவர் அழைத்துவந்த பிற்காலத்தில் புனிதர்களான மேஜலஸ், ஓடிலோ ஆகியோர் போலத் தன்னை மாற்றிக்கொள்வதில் ஆர்வங் கொண்டார். ஆலயங்களையும் துறவியர் இல்லங்களையும் கட்டினார். அதில் வாழ்ந்தோருக்கு மானியமும் வழங்கினார். அவரது இறுதிமூச்சு வரையும் உழைத்தவர், பின் ஓய்வுபெற்று ஸ்ராஸபேர்க்கின் அருகிலுள்ள ஒரு துறவற இல்லத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு சென்று வாழ்ந்து தன் புனிதமான மரணத்திற்காக ஆயத்தஞ் செய்தார். 999ம் வருடம் மார்கழித் திங்கள் பதினாறாம் நாளிலே உலகை நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மார்கழி 21 : புனித பீற்றர் கனிசியஸ்

**1521ம்** வருடம் வைகாசித் திங்கள் எட்டாம் நாளிலே ஜேர்மனியின் ஒரு பகுதியாக இருந்த ஹொலன்ட் நாட்டில் நிஜ்மேகன் எனும் ஊரினிலே இந்தப் புகழ்மிக்க இயேசுசபை உறுப்பினர் பிறந்தார். தமது இருபத்திரண்டு வயதினிலே இயேசு சபையில் இணைந்து கல்வி பயில்வதிலும், ஆன்மீகத்தில் நிலைப்பதிலும் ஈடுபட்டார். அத்துடன் ஜேர்மனியின் இரண்டாவது மகா சீடராகவும், போதகராகவும், இறையியலாளராகவும், வருமானத்தைச் சீர்படுத்துபவராகவும் இருந்தார். இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்த இந்தத் தெய்வீக மனிதன் திருச்சபையைச் சீர்திருத்த முதலில் அதன் போதகர்களையும், எதிர்காலச் சந்ததியினரையும் சீர்திருத்திப் பொதுநிலையினரைச் சரியான முறையில் வழிநடத்தி விசுவாசத்தில் நிலைக்கச் செய்ய வேண்டும் என உணர்ந்தார். எனவே, இவரது பேனாவிலிருந்து பல செயற்பாடுகள் உதித்தன. முக்கியமாக 1560ம் வருடத்தில் இவரால் உருவான மறைக்கல்வி நூலானது, அந்த நூற்றாண்டு இறுதிக்குள் இருநூறு பிரதிகள் வரை அச்சிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. 1597ம் வருடம் சுவிற்சலாந்து நாட்டின் பிறிபேர்க் எனுமிடத்தில் இவர் இறைவனடி சேர்ந்தார். பரிசுத்த பாப்பரசர் 11ம் பத்திநாதர் 1925ம் வருடம் வைகாசித் திங்கள் இருபத்தோராம் நாளன்று இவருக்குப் புனிதர் பட்டமளித்ததுடன் திருச்சபையின் புலமைமிக்கவர் என்பதையும் பிரகடனப்படுத்தினார்.

## ■ மாணவர் பக்கம் .... ■

(cms) இந்தியாவிலே அங்கிலிக்கன் சபையானது தோற்றம் பெற்றது. இச்சபையானது 1814ல் இந்தியாவிற்கு வந்து 1816ல் கேரளாவை அடைந்து அங்கு தமது மறைபரப்புப் பணி மையத்தளத்தை அமைத்தது. ஆரம்பத்தில் வைதீகத் திருச்சபையுடன் இணைந்து செயற்பட்ட இவர்கள், பின்னர் வைதீகத் திருச்சபையினர் தமது புரட்டஸ்தாந்து இறையியலைப் பின்பற்றுமாறு வற்புறுத்தியதால் இதனை ஏற்க மறுத்த இவர்களின் உறவு முறிவடைந்தது. தனித்துச் செயற்பட்ட அங்கிலிக்கன் சபையினர், தம் கவனத்தைப் பின்தங்கிய மக்கள் பால் திருப்பினர். அதாவது, புள்ளயா, பறயா, குறவர், ஆதிவாசிகள் போன்ற தாழ்ந்த சாதியினருக்குப் பணி செய்தனர். இவர்களின் தொடர்பிற்கு மொழிப் பிரச்சினை இருந்ததால் மீண்டும் வைதீக சபைக் குருவான ஜோர்ச் மதனுடைய உதவியை நாடினர். இவர்கள் தம்மால் மதம் மாறியவர்களை அடிமை நிலையிலிருந்து விடுவித்து, விவசாயம் செய்யக் காணிகளை வழங்கி, கல்கத்தா, பொம்பே, மதராஸ் போன்ற இடங்களில் மறைமாவட்டங்களை உருவாக்கினர். திருவனந்தபுரம், கொச்சின் போன்ற இடங்களிலும் தமது பணிகளை விரிவாக்கினர். 1879ல் திருவனந்தபுரம், கொச்சின் மறைமாவட்டங்களாகின.

1947ல் இவர்கள், பிறஸ்பிற்றேரியன், மெதடிஸ்ற் மற்றும் புரட்டஸ்தாந்து சபைகளுடனிணைந்து தென் இந்தியத் திருச்சபையினை உருவாக்கினர். பின்னர் இவர்களது திருச்சபை படிப்படியாய் மறையத் தொடங்கியது. இதை உணர்ந்த சிலர் 1964ல் தென் இந்தியத் திருச்சபையிலிருந்து விலகி, மீண்டும் தனித்து இயங்கி அங்கிலிக்கன் சபைக்குப் புத்துயிர் அளித்தனர்.

இன்று இந்தியாவில் இத்திருச்சபைக்கு 13 மறை மாவட்டங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# விவிலியம் கற்போம் – 126

## யோசுவா அதிகாரங்கள் 3, 4

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

யோசுவா அதிகாலையில் விழித்தெழுந்து இஸ்ராயேலருடன் சித்திமிலிருந்து புறப்பட்டு யோர்தானை வந்தடைந்தார். மூன்று நாட்கள் வரை தங்கி, பின் மக்களுக்குக் கட்டளையிட்டு "உடன்படிக்கைப் பேழையை லேவியர் தூக்குவதைக் கண்டால், நீங்கள் அதன்பின் செல்ல வேண்டும். ஆயினும், ...................... இடைவெளி இருக்கட்டும். உங்களைத் தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். நாளை ஆண்டவர் வியத்தகு செயல்கள் புரிவார்'' என்றார். பின் குருக்களிடம் "உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிக்கொண்டு மக்கள் முன் ...................... செல்லுங்கள்'' என்றார். அவர்களும் அவ்வாறே செய்தனர். ஆண்டவர் யோசுவாவிடம் "இன்று இஸ்ரயேலர் அனைவரின் பார்வையில் உன்னை உயர்த்தத் தொடங்குகிறேன். மோசேயுடன் இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன் என்று அவர்கள் அறிந்து கொள்வார்கள். குருக்கள் ...................... அடைந்ததும் அங்கேயே நிற்குமாறு கட்டளையிடு'' என்றார். யோசுவா மக்களிடம், "கடவுளின் வார்த்தை களைக் கேளுங்கள். இவர் உங்களிடையே இருக்கிறார். அவர் உங்கள் முன்னிலிருந்து கானானியர், இத்தியர், இவ்வியர், பெரிசியர், கிர்க்காசியர், எமோரியர், ...................... ஆகியோரை விரட்டிவிடுவார். பன்னிரு குலங்களிலுமிருந்து குலத்திற்கு ஒருவராக நீங்கள் தேர்ந்தெடுங்கள். ஆண்டவரின் பேழையைத் தூக்கிச் செல்லும் குருக்களின் காலடிகள் யோர்தான் நீரில் பட்டவுடன் அத்தண்ணீர் பிரிந்துபோகும். மேற்பகுதியிலிருந்து ஓடிவரும் தண்ணீர் ...................... நிற்கும்'' என்றார். இஸ்ரயேலர் அனைவரும் கடந்து முடிக்கும்வரை, உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிச் சென்ற குருக்கள் யோர்தான் நடுவே வறண்ட தரையில் நின்றனர். மக்கள் அதன் வழியாக நடந்தனர். யோர்தானைக் கடந்து முடித்ததும் ஆண்டவர் ...................... "தெரிந்தெடுத்த பன்னிருவருக்கும் குருக்களின் பாதங்களிருக்கும் இடத்திலிருந்து பன்னிரு கற்களையெடுத்துக்கொண்டு வரக்கூறுங்கள். அவற்றை இவ்விரவு தங்குமிடத்தில் வைக்கச் செய்யுங்கள்" என்றார். யோசுவா அவ்வாறே கூறி, "அக்கற்களைத் தோளில் சுமந்து செல்லுங்கள். இவை உங்களுக்கு ...................... இருக்கும். பிற்காலத்தில் உங்கள் பிள்ளைகளுக்கு 'யோர்தான் நீர் உடன்படிக்கைப் பேழையின் முன் பிரிந்து நின்றது. அந்த நிகழ்ச்சியை இக்கற்கள் நினைவூட்டுகின்றன', எனச் சொல்லுங்கள்'' என்றார். அவர்களும் அவ்வாறே சென்று செய்தனர். அக்கற்கள் இன்றுவரை அங்கேயே உள்ளன. இவையனைத்தும் முடியும்வரை ...................... தூக்கிச் சென்ற குருக்கள் யோர்தான் நடுவிலேயே நின்றனர். மக்களும் விரைவில் கடந்தனர். மோசே கூறியிருந்தபடி ரூபன், காத்தின் மக்களும் மனாசேயின் அரைக்குலமும் படைக்கலன்கள் தாங்கியவராய் மக்கள் காண நடந்து வந்தனர். ஏறக்குறைய நாற்பதாயிரம் பேர் போருக்குத் தயாராக ஆண்டவர் முன் ...................... சமவெளிக்குச் சென்றனர். அன்று ஆண்டவர் யோசுவாவை உயர்த்தினார். மக்கள் அவரை மதித்தனர். ஆண்டவர் கூறியதுபோலக் குருக்களைக் கரையேறச் சொன்னார் யோசுவா. அவர்கள் கரையேறியதும் நீர் தன் இடத்திற்குத் திரும்பி முன்போல ஓடியது. முதல் மாதம் பத்தாம் நாளில் அங்கிருந்து வெளியேறி எரிக்கோவின் கிழக்கிலிருந்த ...................... தங்கினர். பன்னிரு கற்களையும் அங்கே நட்டனர். "இதுபற்றி எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளிடம் சொல்லுங்கள். அதனால் உலகின் எல்லா மக்களும் ஆண்டவரின் கை வலிமை யுள்ளது என்று அறிவர். நீங்களும் கடவுளுக்கு அஞ்சுவீர்கள்'' என்று யோசுவா கூறினார்.

**விடைகள்:** **யோர்தானை, யோசுவாவிடம், அடையாளமாக, பேழையை,**
**இரண்டாயிரம் அடி, எபூசியர், எரிகோ, கில்காலில், குவியலாக, கடந்து.**

(வினாமுடிவுத்திகதிக்கு முன்பே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியவர்
(கல்கி - சுந்தரம் இராமசாமி - மயூரம் வேதநாயகம் பிள்ளை)

2. சங்கீத மும்மூர்த்திகளில் முதல்வர் இவர்
(முத்துஸ்வாமி தீட்சிதர் - தியாகராஜ சுவாமிகள் - ஷியாமா சாஸ்திரி)

3. எவரெஸ்ட் சிகரம் உள்ள நாடு
(நேபாளம் - இந்தியா - பாகிஸ்தான்)

4. பூமியின் ஈர்ப்பு சக்தியிலும் பார்க்க சந்திரனின் ஈர்ப்பு சக்தி
(நாலில் மூன்று - பத்தில் ஆறு - ஆறில் ஒன்று)

5. சட்டியில் இருந்தால்தான் ..................................
(சாப்பிட முடியும் - அகப்பையில் வரும் - சமைக்க இயலும்)

6. 'அன்றை' என்பது அற்றை என வருவது
(குறுக்கல் விகாரம் - தொகுத்தல் விகாரம் - வலித்தல் விகாரம்)

பெயர் : ..............................................................................................

முகவரி: ..............................................................................................

..............................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 126**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 124 விடைகள்

கிலயாது, பேரீச்சை, கண்களால், அடக்கம், மோவாபு, நூனின், யோசுவாவுக்கு, இறைவாக்கினர், அடையாளங்களையும், ஆற்றல்மிகு

## அறிவை வளர்ப்போம் - 124 விடைகள்

**1.** பத்து இலட்சம் **2.** 206 **3.** டி.எஸ்.சேனாநாயக்கா
**4.** நவரத்தினசாமி **5.** நக்கீரர் **6.** கரம்பன்

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து 300/= பரிசு பெறுவோர்

- **A.** லிசாந்தன் ஒலிவர்
  169/1A, லூர்த்து அன்னை வீதி,
  பார்வீதி,
  மட்டக்களப்பு.
- பா. ஹரிஷனா,
  78/8, பற்றிமாகிரி வீதி,
  தாண்டவன்வெளி,
  மட்டக்களப்பு.

ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்

- யோ. லுசாந்தினி,
  காளி கோவில் வீதி,
  விநாயகபுரம் - 03.
  திருக்கோவில்.
- அ. டிலோஜினி,
  பாடசாலை வீதி,
  வாகரை.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 76 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  அஸ்லினா எல்டன்,
  இல. 12, முதல் தெரு,
  பாரதிபுரம்,
  திருகோணமலை.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  T. ராறோ பிரியங்கா,
  36A, வைரமுத்து ஒழுங்கை,
  திருமலை வீதி,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  ஜெ. அருண்குமார்,
  இல. 13/6, தண்ணீர்
  கிணற்றடி வீதி,
  பாலமீன்மடு, மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media